www.padippakam.com

மார்ச் 2005

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



சுனாமி துயரம்
ஏகாதிபத்திய தந்திரம்




## வரி விதிப்புகளில் நரித்தனங்கள்!

www.padippakam.com

# அரசு அலுவலகமா? இந்துக் கோயிலா?

## நியாயத்தைக் கேட்ட ஊழியருக்குச் சித்திரவதை! சிறை தண்டனை!

“அரசு அலுவலகத்தில் அலுவலக வேலை மட்டுமே பார்க்க வேண்டும்! சாமி படங்களை மாட்டிக் கொண்டு அரசு ஊழியர்கள், அலுவலக நேரத்தில் பூஜை, புனஸ்காரம் என்று புரோகிதர்கள் போல் திரியக்கூடாது'' என்று ஒரு அரசு ஊழியர், தனது சக ஊழியர்களை வலியுறுத்துவதில் ஏதாவது தவறு இருக்கிறதா?

‘ஆமாம் தவறுதான்! அதுவும் மாபெரும் தவறு!' என்று அவ்வூழியரைச் சித்திரவதை செய்து, சிறை பிடித்தது அரசு எந்திரம்!

கோ.கிருஷ்ணமூர்த்தி, திருவண்ணாமலை மாவட்டம் ஆருத்திராப்பட்டு சிற்றூரைச் சேர்ந்தவர்; தாழ்த்தப்பட்டவர். ஆரணி தலைமை அஞ்சலகத்தில் அஞ்சல் உதவியாளராகப் பணிபுரிகிறார். இதோ, அவரே கூறுகிறார், ''நான் பிப்ரவரி 2004-இல் ஆரணி தலைமை அஞ்சலகத்தில் பணிக்குச் சேர்ந்தது முதலே அங்கு ஆங்காங்கே சட்டவிரோதமாக வைக்கப் பட்டிருந்த இந்துமத சாமி படங்களை அகற்ற வேண்டியும், அவற்றிற்கு அரசு பணத்தை ஊழல் செய்து பணிநேரத்தின் போது நிகழ்த்தப்பட்டு வந்த பூசை - யாகங்களை நிறுத்தக் கோரியும் அஞ்சல் துறை அதிகாரிகளுக்குப் புகார் மனு தந்தேன். ஆத்திரங்கொண்ட குறிப்பிட்ட (மேல்சாதி) அஞ்சல் ஊழியர்கள் கூட்டுச் சதி செய்து, அவர்களே சில சாமி படங்களை உடைத்துவிட்டு என் மீது பழி சுமத்தி, நான்தான் உடைத்தேன் என்று அவதூறு குற்றச்சாட்டுகளுடன் என்மீது ஆரணி காவல் துணை கணகாணிப்பாளர் அவர்களிடம் பொய்ப் புகார் (02.08.2004 அன்று) கொடுத்தனர். உடனே, ஆரணி நகர காவல் ஆய்வாளர் திரு. முரளி என்பவர், என்னை முறையாக விசாரிக்காமல் ஆபாசமாகத் திட்டியும் மிரட்டியும் கைது செய்து காவல்நிலையத்துக்கு இழுத்துச் சென்று, நான் அணிந்திருந்த மேல் சட்டை, முழுக்கால் சட்டை ஆகியவற்றை கழட்டச் சொல்லிவிட்டு, என்னை ஜட்டியுடன் கால் நீட்டி உட்கார வைத்து, என் இரு முன்னங்கால்களின் மீதும் தனது ஷூ கால்களுடன் ஏறி நின்று, லத்தியால் எனது கால் பாதங்களில் பயங்கரமாகத் தாக்கினார். மீண்டும் என்னை எழுந்து நின்று குதிக்கச் சொல்லி, அவ்வாறு நான் குதித்த போது, என் முதுகுப்புறத்திலும், புட்டங்களிலும் பின்னங் கால்களிலும் பயங்கரமாகத் தாக்கினார். பிறகு, ''டேய் பரத் தேவடியாப் பய்யா! நீ கொழுப்பேரியவண்டா, ஸ்டேசன்ல சாமி படம் இருக்குதே, உடைடா பார்ப்போம்'' என்று கேவலப்படுத்தினார்.



உடைக்கப்பட்ட படங்கள்...

படஉதவி: ஜூ.வி.



கிருஷ்ணமூர்த்தி

இவ்வாறு மிருகத்தனமாக அவரை இரண்டு நாட்கள் சித்திரவதைச் செய்து, 3.8.04 முதல் 11.11.04 வரை மூன்று மாதத்திற்கும் மேலாக, அவரை வேலூர் மத்திய சிறையில் அடைத்தது, போலீசு.

தாழ்த்தப்பட்ட அரசு ஊழியர் கிருஷ்ணமூர்த்தியை அவமானப்படுத்திச் சித்திரவதைச் செய்து, சிறைபிடித்த போலீசு கும்பலையும் அதற்குத் துணை போன துறைசார்ந்த அதிகார வர்க்க கும்பலையும் அஞ்சலகத் துறையில் இயங்கும் எந்தவொரு தொழிற்சங்கத் தலைமையும் ஏன் தட்டிக் கேட்கவில்லை? அவர், அப்படியே இந்து சாமி படங்களைக் குப்பையில் போட்டிருந்தாலும், அதை உடைத்திருந்தாலும் என்ன தவறு?

ஆனால், ஓட்டுச்சீட்டு தொழிற்சங்கத் தலைமைகளோ, ''ஒன்றுமில்லை! இது வெறும் சுண்டல் கொடுக்கும் சமாச்சாரம்'' என்று நழுவிக் கொள்கின்றன. இதன் மூலம் பக்தி என்ற பெயரில் சிறுகச் சிறுக அரசு எந்திரத்தின் அடித்தளம் வரை ஊடுருவி விட்டது, பார்ப்பனியம். சட்டத்தை மீறி அரசு அலுவலகத்திற்குள்ளேயே கோயில் கட்டுவது, கும்பாபிஷேகம் நடத்துவது, விழா எடுப்பது, இந்து பண்டிகைகள் கொண்டாடுவது என்று அரசு அலுவலகங்களை தினமும் பக்தி பிரசங்கம் நடக்கும் கோயில் பிரகாரங்கள் போல் மாற்றி விட்டனர். பக்திக்கு ஒன்று சேரும் இவர்கள், ''நாங்கள் அரசு அலுவலகங்களில் இலஞ்சம் வாங்க மாட்டோம், இனாம் கேட்டு கையேந்த மாட்டோம்'' என்று உறுதிமொழி எடுப்பதற்கு ஒன்று சேருவார்களா? என்று உண்மையிலேயே இறை நம்பிக்கையுள்ள அரசு ஊழியர்கள் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



தபால் நிலையம்...

சட்டப்பூர்வமான கோரிக்கைக்கு அமைதியான வழியில் போராடிய அஞ்சல் உதவியாளர் கிருஷ்ணமூர்த்திக்கு, திரும்பவும் அரசு ஊழியருக்கான அனைத்து உரிமைகளையும் நட்ட ஈடும் வழங்குவதோடு, சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அவரிடம் எழுத்துப்பூர்வமாக மன்னிப்பு கோர வேண்டும்.

அஞ்சல் ஊழியர்கள் மட்டுமல்ல, அனைத்து அரசுத் துறை ஊழியர்களும் ஒன்றிணைந்து இப்பிரச்சினையை மக்களிடம் கொண்டு சென்று சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உடனடியாகத் தண்டிக்கப் போராட வேண்டும்.

- பு.ஜ. செய்தியாளர்


படிப்பகம்

www.padippakam.com


புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 20
இதழ் 5
மார்ச் 2005

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


# வரி விதிப்புகளில் நரித்தனங்கள்!

ஆங்கில மாத வரிசைப்படி ஜனவரி, பிப்ரவரி அதற்கு அப்புறம் மார்ச்(வரி). ஆங்கிலத்தில் மார்ச்சுவரி என்றால் பிணக்கிடங்கு என்று பொருள். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில்தான் புதுப்புது வரிகள் போடும் அரசின் வரவு - செலவு அறிக்கையும் வருகிறது. அதாவது, மதிப்புக் கூடுதல் வரி (வாட்), சேவை வரி என வரிச் சுமையேற்றியே மக்களை போ (மார்ச்சுவரி) பிணக்கிடங்குக்கு என்று தள்ளிவிடுகிறார்கள் ஆட்சியாளர்கள்.

இப்போதெல்லாம் அநேகமாக எல்லா ஓட்டுக் கட்சிகளும் (கூட்டணிகள் மூலம்) ஆட்சி அதிகாரத்தில் பங்கு வகிக்கின்றன. புதுப்புது வரிகளால் அரசுக்கு வருவாய் குவியும் என்றால், அதில் இவர்களுக்கும் ஒரு பங்கு கிட்டத்தானே செய்யும். அதனால்தான் மக்கள் மீது எவ்வளவு வரிச்சுமை ஏற்றினாலும் ஓட்டுக்கட்சிகள் வாய் திறப்பதோ, சிறு முணுமுணுப்புச் செய்வதோ கூடக் கிடையாது.

மைய அரசின் 2004-2005 ஆண்டு வரவு-செலவு கணக்குப்படி மொத்தவரி வசூல் 3,17,723 கோடி ரூபாய். இது தவிர, மாநில அரசுகளின் வரி வசூல் இன்னும் சில இலட்சம் கோடி ரூபாய். ஏற்கெனவே விதிக்கப்பட்ட வரியைக் கறாராக வசூலித்தால், அதிலும் இலஞ்ச-ஊழலை ஒழித்தால், வசூலித்த தொகையை வீண் விரயம் செய்யாமல் அவசியமான பணிகளுக்கு உருப்படியாக செலவு செய்தாலே புதிய புதிய வரிகள் விதிக்க வேண்டிய அவசியமே இல்லை. உச்சநீதி மன்றத் தீர்ப்பும், ஆண்டுதோறும் வெளியிடப்படும் பொதுத் தணிக்கை மற்றும் நெறிப்படுத்தும் ஆணையர் அறிக்கையும் இவ்வாறு கூறுகின்றன. ஆனால், தற்போதுள்ள வரி விதிப்புகள் போதாதென்று, இந்த ஆட்சிக் காலத்திலேயே அதை இரண்டு மடங்காக்குவதில் உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனத்தின் இந்தியக் கைக்கூலிகள் முனைந்து இறங்கியுள்ளனர். முக்கியமாக பிரதமர் மன்மோகன் சிங், நிதியமைச்சர் ப. சிதம்பரம், திட்டக் கமிசன் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா ஆகிய மூவரும் தமது ஏகாதிபத்திய எஜமானர்கள் வகுத்துக் கொடுத்த கட்டளையின்படி இதைச் சாதித்து வருகிறார்கள்.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற மறுகாலனியாக்கக் கொள்கையின் மிக முக்கியமான கூறு, இந்த நாட்டுப் பொருளாதாரக் கட்டுமானத்தை மறுசீரமைப்பதாக உள்ளது. இதனால் வரி விதிப்பு மற்றும் பிற வருவாய்த் துறைகளின் கட்டுமானத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றனர். வரி வசூலிப்பதற்கான அடித்தளத்தை அதிகரிப்பது, சுங்க வரி மற்றும் இறக்குமதித் தீர்வையைக் குறைப்பது, உலகின் பல நாடுகளிலும் இப்போது அறிமுகப்படுத்தப்பட்டு வரும் மதிப்புக் கூட்டு வரி முறையைப் புகுத்துவதன் மூலம் வரி வசூலிக்கும் முறைகளை எளிமைப்படுத்துவது என்ற இந்த மாற்றங்கள் அனைத்தும் வெறுமனே அரசு வருவாயைப் பெருக்குவதற்கானவை மட்டுமல்ல. ஏகாதிபத்திய பன்னாட்டுத் தொழிற் கழகங்களின் விரிவாக்கத்துக்கும் கொள்ளை இலாபத்துக்கும் வழி வகுப்பவையாகும். சுங்க வரி மற்றும் இறக்குமதி தீர்வையைக் குறைப்பதன் மூலம் அந்நிய நுகர்பொருட்களுக்கான சந்தைக்கு வசதி செய்து தரப்படுகிறது. மதிப்புக் கூடுதல் வரி விதிப்பின் மூலம் சிறு, நடுத்தர வியாபாரிகள் கூடக் கணினி வைத்துக் கொண்டு கொள்முதல், விற்பனை, விலை விவரங்களை அன்றாடம் முடிக்க வேண்டும். சிறு நடுத்தர வணிகர்கள் ஒழிக்கப்பட்டு, அந்நிய நிறுவனங்கள் முதலீடு செய்யும் பல்பொருள் சிறப்பு அங்காடிகள் (சூப்பர் மார்க்கெட்டுகள்) பல்கிப் பெருக வழிவகுக்கப்படுகிறது. ஏற்கெனவே உள்ள நுழைவு வரி, மத்திய வணிக வரி போன்றவற்றை நீக்காமலே, புதிதாக 'வாட்' வரி என்கிற பெயரில் பலமுனை வரி விதிக்கப்படுகிறது.

நாட்டின் 90 சதவீதத்துக்கும் மேலான மக்களை வரி விதிப்பின் கீழ் கொண்டு வந்து வரி வசூலை விரிவுபடுத்துவதுதான் சேவை வரியின் நோக்கமாகும். 1994-இல் மன்மோகன் சிங் நிதியமைச்சராக இருந்தபோது, தொலைபேசி, காப்பீடு மற்றும் பங்குச் சந்தைத் தரகு வேலை ஆகிய மூன்று துறைகளுக்கு மட்டும் 5 சதவீத அளவு சேவை வரியை புகுத்தினார். இதுவரை அது 71 சேவைத்துறைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு 10.2 சதவீத அளவு வரியாக உயர்த்தப்பட்டு, ஆண்டுக்கு அவ்வரி வசூல் 14,150 கோடி ரூபாய் என்று வளர்ந்துள்ளது. இந்த ஆண்டு வரவு-செலவு அறிக்கையில் மேலும் 25 துறைகளுக்கு விரிவுபடுத்தி, 12 சதவீதமாக உயர்த்தி சேவை வரிமூலம் மொத்தம் 20,000 கோடி ரூபாயை வசூலிக்க இருக்கிறார்கள்.

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# சுனாமி துயரம்
# ஏகாதிபத்திய தந்திரம்

சுனாமி பேரலை ஆசிய கண்டத்தைச் சேர்ந்த ஏழை நாடுகளைத் தாக்கிய பொழுது, அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் 1600 ஏக்கர் பரப்பளவு கொண்ட தனது பண்ணையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். உலகையே உலுக்கிப் போட்ட இந்தத் துயரமான சம்பவத்தைக் கேள்விப்பட்ட பிறகும்கூட, புஷ் தனது ஓய்வை ரத்து செய்யவில்லை. மூன்று நாட்கள் கழித்துதான் இரங்கல் செய்தியொன்றை வாசித்துவிட்டு, ஒன்றரை கோடி அமெரிக்க டாலரை (ஏறத்தாழ 75 கோடி ரூபாய்) நிவாரண நிதியாகக் கொடுப்பதாக அறிவித்தார், புஷ்.

அமெரிக்க அரசின் இந்த உதவியை, ஐ.நா. சபை கஞ்சத்தனமானது என விமர்சித்தது. ''ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க சிப்பாய்களின் காலைச் சாப்பாட்டுக்கே தினந்தோறும் 175 கோடி ரூபாய் செலவு செய்யும் அமெரிக்கா, நிவாரணத்திற்குப் பிச்சைப் போடுகிறதா?'' என உலகெங்கிலும் இருந்து கண்டனக் குரல்கள் எழுந்தன.

உழைக்கும் மக்கள் தார்மீகக் கோபத்தோடு ஜார்ஜ் புஷ்ஷின் ''கல் மனதை''த் திட்டித் தீர்த்தபொழுது, முதலாளித்துவ பத்திரிகைகள் புஷ்ஷுக்குப் புரியும் மொழியில் அறிவுரை சொன்னார்கள். ''ஐயா, புஷ் அவர்களே, சுனாமி பேரலை தென்கிழக்கு ஆசியாவின் சுற்றுலாத் தொழிலைத் தாக்கி அழித்து விட்டது. சுற்றுலா இல்லையென்றால் ஹோட்டல் தொழில் படுத்துவிடும்; சுற்றுலா இல்லையென்றால் அமெரிக்க விமான கம்பெனிகளின் இலாபம் படுத்துவிடும். எனவே, நீங்கள் இதை நிவாரண உதவியாகப் பார்க்காதீர்கள்; வியாபாரமாகப் பாருங்கள்'' என நிவாரணத்தின் நோக்கத்தைப் பச்சையாகப் புட்டு வைத்தார்கள். இந்தப் புத்திமதிக்குப் பின்னர்தான் புஷ்ஷுக்கு விசயம் புரிந்ததோ என்னவோ? நிவாரண உதவித் தொகையை 75 கோடி ரூபாயில் இருந்து 175 கோடி ரூபாயாக்கி, அதற்குப் பிறகு 1750 கோடி ரூபாய் நிவாரண உதவி அளிப்பதாக அறிவித்தார்.

ஈராக் போரைத் தொடர்ந்து நடத்துவதற்காக இதுநாள் வரை அமெரிக்கா 7,40,000 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது; பிரிட்டனின் ஈராக் போர் செலவு 57,500 கோடி ரூபாய். ஆனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்கு ஐ.நா. சபை ஏகாதிபத்திய நாடுகளிடம் கேட்ட உதவியோ வெறும் 4,885 கோடி ரூபாய் தான்.

ஈராக் போர் செலவோடு, அமெரிக்கா அறிவித்துள்ள உதவித் தொகையை ஒப்பிட்டால், அது வெறும் சுண்டைக்காய்தான். அமெரிக்காவிடம் குவிந்திருக்கும் பணம், வானத்தில் இருந்து குண்டுகளை வீசி மக்களைக் கொல்வதற்குத்தான் பயன்படுமேயொழிய, மக்களை வாழ வைக்கப் பயன்படாது எனப் புரிய வைத்ததற்காக வள்ளல் புஷ்ஷுக்கு நாம் நன்றி சொல்லலாம்!

இந்தோனேஷியாவும், தாய்லாந்தும் அமெரிக்காவின் ஹவாய் தீவில் செயல்பட்டு வரும் பசிபிக் பெருங்கடல் சுனாமி எச்சரிக்கை மையத்தில் உறுப்பு நாடுகளாக உள்ளன. எனினும், இந்த நாடுகளை டிச. 26 அன்று சுனாமி தாக்கிய சமயத்தில், அத்தாக்குதல் பற்றி அமெரிக்காவோ, சுனாமி எச்சரிக்கை மையமோ முன்கூட்டியே தகவல் கொடுத்து எச்சரிக்கத் தவறி விட்டன. இலட்சக்கணக்கான மக்கள் சாவதைக் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்த அமெரிக்கா, இப்பொழுது ''நிவாரணப் பணிகளை''ச் செய்ய இலங்கையிலும், இந்தோனேஷியாவிலும், தாய்லாந்திலும் நுழைந்திருக்கிறது.

''அமெரிக்காவின் நோக்கங்களுக்குப் பலன் அளிக்காத நாடுகளுக்கு உதவுவதற்கு, அமெரிக்கா தர்ம சத்திரம் நடத்தவில்லை'' என அமெரிக்க அதிகாரிகள் சுனாமி நிவாரண உதவி பற்றிய கேள்விகளுக்குப் பச்சையாகப் பதில் கூறியிருக்கிறார்கள். அப்படியென்றால், இந்த நாடுகளில் எல்லாம் பிணத்தைத் தூக்கிப் போடும் வேலையை மட்டும் செய்துவிட்டுப் போவதற்காக அமெரிக்கா வரவில்லை என அடித்துச் சொல்லலாம்!

''இனி இந்த நாடுகள் பழைய மாதிரி வாழ முடியாது. நவீனமயத்திற்குள் புகுந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தை, இந்த சுனாமி இவர்களுக்கு ஏற்படுத்தி விட்டது'' என்கிறார், தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த பங்குச் சந்தை தரகர். பிணங்களின் மீதும், இடிபாடுகளின் மீதும் ஏறி நின்று கொண்டு, ''ரியல் எஸ்டேட் தரகர்கள், கட்டுமான நிறுவனங்கள், இரும்பு, சிமெண்ட், ஆலை

**நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமெரிக்க அரசால் அனுப்பப்பட்ட முன்னாள் குடியரசுத் தலைவர்கள் ஜார்ஜ் புஷ்ஷும் (இடது), கிளிண்டனும் இலங்கை அதிபர் சந்திரிகாவைச் சந்தித்து உரையாடுகிறார்கள்.**




படிப்பகம்

www.padippakam.com

முதலாளிகளுக்குப் பிரகாசமான எதிர் காலம் இருக்கிறது'' என இலாபக் கணக்குப் போடுகிறார்கள், பொருளா தார நிபுணர்கள்.

இலங்கைக்கும், இந்தோனேஷியா விற்கும், தாய்லாந்திற்கும் நிவாரண உதவி வழங்குவதில் அக்கறை காட் டிய அமெரிக்கா, சுனாமியால் பாதிக் கப்பட்ட சோமாலியாவைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ''அந்த நாடுக ளைப் போல எங்கள் நாடு சுற்றுலா முக் கியத்துவம் வாய்ந்தது கிடையாது; அத னால் உதவி கிடைக்கவில்லை'' என்கி றார் சோமாலியா நாட்டின் அதிபர். ஆதாயம் இல்லாமல் அமெரிக்கா ஆற் றில் இறங்காது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

இந்த வர்த்தக நோக்கத்தோடு மட் டும் அமெரிக்காவின் ஆசை அடங்கி விடவில்லை. இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்காவின் ஆதிக் கத்தை விரிவுபடுத்துவது; அட்லாண் டிக் பெருங்கடலையொட்டி அமைந் துள்ள ஐரோப்பிய நாடுகளை இணைத்து உருவாக்கப்பட்டுள்ள ''நேடோ'' அமைப்பு போன்று, இந்தி யப் பெருங்கடல் பகுதியிலும் ஒரு இராணுவக் கூட்டணியை அமைப்பது என்ற திட்டத்தோடு அமெரிக்கா காய் களை நகர்த்தியது.

சுனாமி தாக்குதல் போன்று இயற் கைப் பேரிடர் ஏற்படும்பொழுது, ஐ.நா. சபையின் தலைமையில்தான் நிவாரணப் பணிகள் நடைபெறும். ஆனால், அமெரிக்காவோ, ஐ.நா. மன் றத்தை ஓரங்கட்டிவிட்டு, நிவாரணப் பணிகளைத் தனது தலைமையில் நடத் தத் தீவிரமாக முயன்றது.

ஐ.நா.விற்கு மாற்றாக, தனது தலை மையில் நான்கு உறுப்பு நாடுகளைக் கொண்ட குழுவொன்றைத் தனியாக அமைத்தது அமெரிக்கா. இந்தக் குழு வில் சுனாமி தாக்குதலினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்தோனேஷியாவும், தாய்லாந்தும் சேர்க்கப்படவில்லை. மாறாக, அமெரிக்காவின் இராணுவக் கூட்டாளிகளான ஜப்பானும், ஆஸ்தி ரேலியாவும் சேர்க்கப்பட்டன. நான்கா வது உறுப்பு நாடாக இந்தியா இணைக் கப்பட்டதற்குக் கூட, சுனாமி தாக்குதல் காரணமல்ல. இந்தியாவுக்கும், அமெ ரிக்காவுக்கும் இடையே ஏற்பட்டுவ ரும் இராணுவ உறவுகள்தான் காரணம்.

''நேடோ''வுக்கு இணையான வெள்ளோட்டமாக இந்தக் குழு உரு வாக்கப்பட்டது. ஆனாலும், நிவார ணப் பணிகளில் ஐ.நா.வை ஓரங்கட் டும் விதமாக இந்தக் குழு அமைக்கப் பட்டதற்கு உலகெங்கிலும் எழுந்த கண் டனங்களையடுத்து, அமெரிக்கா இந் தக் குழுவை உடனடியாகக் கலைத்து விட்டது. எனினும், ஐ.நா.வின் ஒப்புத லுடன், அமெரிக்க இராணுவத்தை இந் தியப் பெருங்கடல் பகுதியில் இறக்கி விடுவதில் அமெரிக்கா வெற்றி பெற்று விட்டது.

**மலாக்கா வளைகுடா வழியாகச் செல்லும் அமெரிக்க எண்ணெய்க் கப்பல்களின் பாதுகாப்பை வலுப்படுத்தும் திட்டம் அமெரிக்காவின் நிவாரண உதவியின் பின்னால் மறைந்திருக்கிறது.**

13,000 இராணுவச் சிப்பாய்கள், 21 போர்க் கப்பல்கள், 75 போர் விமா னங்களை அனுப்பி, நிவாரணப் பணி களை முழுவதும் இராணுவமயமாக்கி யது, அமெரிக்கா. ஈராக் போரின் பொழுது அமெரிக்க கப்பற் படையை வழிநடத்திய ரஸ்டி பிளாக்மேன் என்ற தளபதியிடம்தான் 'நிவாரணப் பணி'களை நடத்தும் பொறுப்பும் ஒப்ப டைக்கப்பட்டது. ஈராக்கில் ஏற்பட்ட இரத்தக் கறைகளை இந்தியப் பெருங்க டலில் கழுவப் பார்க்கிறார்கள் போலும்!

இந்த நிவாரணப் படையின் ஒரு பகுதி இலங்கையின் காலி, திருகோண மலை, ஹம்பண்டோடா ஆகிய துறை முக நகரங்களிலும்; இந்தோனேஷியா வின் எண்ணெய் வளம் நிறைந்த அசே தீவிலும் முகாமிட்டுள்ளது. ''எங்களின் பணி முடிந்தவுடனேயே வெளியேறி விடுவோம்'' என அமெரிக்க அரசு கூறி னாலும், 'நிவாரணப் பணி' எப்பொ ழுது முடியும் என்பது புஷ்ஷுக்கு மட் டுமே தெரிந்த மர்மமாக உள்ளது.

''இலங்கையின் வான்பரப்பைச் சுதந்திரமாகப் பயன்படுத்தும் ஒப்பந்த மொன்றை ஏற்கெனவே அமெரிக்கா - இலங்கையுடன் செய்து கொண் டுள்ளது. மேலும், இலங்கையின் மிக வும் உயரமான மலையான பீதுறுதால காலாவில் கண்காணிப்புக் கோபுரம் ஒன்றை அமைக்கவும் அமெரிக்கா முயன்று வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் தான் ''நிவாரணப் பணிக ளுக்காக'' அமெரிக்கா இராணுவத்தை அனுப்பும்படி சந்திரிகா அரசே புஷ் ஷைக் கேட்டுக் கொண்டதாக செய்தி கள் வெளிவந்துள்ளன.

மேற்காசியாவில் அமைந்துள்ள பாரசீக வளைகுடாவில் இருந்து தென் கிழக்காசியாவில் அமைந்துள்ள மலாக்கா வளைகுடா வரை தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் வாய்ப் பாக சுனாமி பேரழிவைப் பயன்படுத்த பார்க்கிறது, அமெரிக்கா. குறிப்பாக, மலாக்கா வளைகுடா வழியாகச் செல் லும் அமெரிக்க எண்ணெய்க் கப்பல்க ளின் பாதுகாப்பை வலுப்படுத்தும் திட் டம் அமெரிக்காவின் நிவாரண உதவி யின் பின்னால் மறைந்திருக்கிறது.

மலாக்கா வளைகுடாவுக்கு அருகே அமைந்துள்ள அசே தீவில் முசுலீம் மத அடிப்படைவாத அமைப்புகள் நடத்தி வரும் 'பிரிவினைவாத'ப் போராட்டங் களைக் காட்டி, அத்தீவுப் பகுதிகளில் அந்நியர்கள் நுழைவதற்குக் கூட இந் தோனேஷிய அரசு தடை விதித்திருந் தது. ஆனால், அமெரிக்காவோ, நிவா ரண உதவி வேண்டும் என்றால் இத்த டையை நீக்க வேண்டும் எனப் பேரம் நடத்தி, தனது கப்பற்படையையே அசே தீவில் நிறுத்திவிட்டது. மேலும், இந்தோனேஷியாவுடன் இராணுவ உறவு கொள்வதில்லை என கிளிண் டன் ஆட்சி காலத்தில் எடுக்கப்பட்ட முடிவையும் ரத்து செய்து விட்டது, புஷ் நிர்வாகம். மலாக்கா வளைகுடா பாதுகாப்புக்காக பிராந்திய ஒப்பந்த மொன்று போட்டுக் கொள்ளும் அமெ ரிக்காவின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்து வந்த இந்தோ னேஷியாவையும், மலேசியாவையும் சம்மதிக்க வைக்கவும் சுனாமி பேரழிவு அமெரிக்காவுக்குப் பயன்படுகிறது. இந்த ஒப்பந்தம் நிறைவேறும் வரை இலங்கையையும், இந்தோனேஷியா வையும் அதிகாரபூர்வமற்ற, தற்காலிக இராணுவத் தளங்களாக அமெரிக்கா பயன்படுத்தக் கூடும்.

அமெரிக்காவின் இந்த இராணுவ நோக்கங்களுக்கும், நிவாரணத்திற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? பத் தாண்டுகளுக்கு முன்பு பஞ்ச நிவாரண உதவி என்ற பெயரில் சோமாலியா நாட்டிற்குள் நுழைந்த அமெரிக்கப் படையை, அந்நாட்டு மக்களே துரத்தி யடித்தனர். காரணம், ரொட்டித் துண்டு களின் பின்னே மறைந்திருந்த அதனின் ஆதிக்கக் கனவு. பஞ்சம், பூகம்பம், வெள்ளம், வறட்சி - இவை மக்களுக் குத்தான் துயரங்கள்; ஆனால் ஏகாதிபத் திய நாடுகளுக்கோ தங்களின் ஆதிக் கத்தை விரிவாக்குவதற்கான வாய்ப்பு கள்!

• ரஹீம்

www.padippakam.com

## நக்சல்பாரி புரட்சியாளர்கள் - ஆந்திர அரசாங்கம் சண்டை நிறுத்தம் - பேச்சு வார்த்தை

# கானல் நீர் தாகம் தீர்க்காது

ஆந்திர மாநில அரசாங்கத்துக்கும், இந்திய கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சிக்கும் இடையிலான சண்டை நிறுத்தம் நீடிக்கும் என்றோ, அமைதிப் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெறும் என்றோ எந்தத் தரப்புக்கும் நம்பிக்கை இருந்ததில்லை.

இரு தரப்பும் சண்டை நிறுத்தம் அறிவித்து எட்டு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், அது ஒரு குறுகிய காலமே அமலில் இருந்தது. பேச்சு வார்த்தைகளுக்கான முன்னேற்பாடுகள் நடக்கும்போதே சண்டை நிறுத்தத்தை மீறி, நக்சலைட்டுப் புரட்சியாளர்களைப் படுகொலை செய்வதில் போலீசும், இரகசியக் கொலைபடைக் குழுக்களும் இறங்கிவிட்டன. பதிலடி கொடுக்கும் முகமாக, இ.க.க. (மாவோயிஸ்ட்)களும் போலீசு உளவாளிகளையும், துரோகிகளையும் அழித்தொழிப்பதைத் தொடங்கிவிட்டனர்.

ஒரு சுற்று மட்டுமே பேச்சு வார்த்தை நடந்து, குறைந்தபட்ச உடன்பாடு எதுவும் காணாமல் கலைந்து போய் நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தைக்கான வாய்ப்புகளை மறுதலிக்கும் வகையிலான நிபந்தனைகளை இரு தரப்புமே விதித்துள்ளன.

''நக்சலைட்டுகள் காடுகளை விட்டு வெளியேவரும்போதும், அரசியல் பிரச்சாரங்களின் போதும் ஆயுதங்களை ஏந்தியிருக்கக் கூடாது, மக்கள் நீதிமன்றங்களுக்கு அதிகாரிகள் வர வேண்டும் என்று நிர்பந்திக்கக் கூடாது'' என்று முதற் சுற்று பேச்சு வார்த்தையையொட்டி ஆந்திர அரசாங்கம் விதித்திருந்த நிபந்தனையை இப்போது மேலும் இறுக்கி இருக்கிறது.

''நக்சலைட்டுகள் ஆயுதங்களைக் களைந்து விட வேண்டும், அரசியல் சட்டத்துக்குட்பட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்'' என்று இப்போது புதிய நிபந்தனைகளை விதித்திருக்கிறது. அதோடு, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கவும் நிலைநாட்டவும் அதிகாரம் கொண்ட ஒரே அமைப்பான போலீசு, தன் கடமையைச் செய்வதை யாரும் தடுக்கக் கூடாது என்று போலீசும் அரசாங்கமும் கடுமையாக எச்சரித்திருக்கின்றன. இவை இரண்டும் இருவேறு நாக்குகளில் பேசிப் பித்தலாட்டம் செய்து வந்ததைக் கூடக் கைவிட்டு, ஒரே குரலில் - அரசு பயங்கரவாதக் குரலில் மிரட்டுகின்றன. இதன் மூலம் சண்டை நிறுத்தம் மற்றும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான அடிப்படையையே தகர்த்து விட்டன.

அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்வதற்கு நக்சலைட்டு புரட்சியாளர்கள் விதித்துள்ள நிபந்தனைகள் நியாயமானவை என்ற போதிலும், அவற்றைப் போலீசும் அரசாங்கமும் ஒருபோதும் ஏற்று அமலாக்கமாட்டா என்பது அவர்களுக்கே நன்கு தெரியும். ''போலீசுடன் மோதல்'' என்ற பெயரில் நக்சல்பாரிப் புரட்சியாளர்களைப் போலீசும், இரகசியக் கொலைக் குழுக்களும் கொன்றொழிப்பதை உடனே நிறுத்த வேண்டும்; அவை தமது தேடுதல் வேட்டையை நிறுத்துவதோடு, ''என்கவுண்டர்'' கொலைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

ஆனால், ஒருபுறம் அமைதிப் பேச்சு வார்த்தைக்கான வேண்டுகோள் விடுத்துக் கொண்டே, மறுபுறம் போலீசை ஏவி நக்சலைட்டு புரட்சியாளர்களைப் படுகொலை செய்யும் இரட்டை நாடகமாடும் தந்திரத்தை ஆந்திர அரசாங்கம் பின்பற்றுகிறது. ஆந்திர நக்சலைட்டுப் புரட்சியாளர்களுக்கு இதுவொன்றும் புதிய அனுபவமல்ல. ஏற்கனவே, சென்னாரெட்டி மற்றும் சந்திரபாபு நாயுடு ஆட்களின் போதும் இப்படித்தான் நடந்தது. இது ஆந்திர ஆட்சியாளர்களுக்கு மட்டுமே உரியதும் அல்ல. வடகிழக்கு இந்தியாவில் தேசிய இன விடுதலைப் போராளிகளுடன் பல ஆண்டுகளாக அமைதிப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே, இராணுவ பாசிச வெறியாட்டமும் தொடர்கிறது.

நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் இயக்கம், தேசிய இன விடுதலை கோரிக்கை போன்றவை சமூக விரோதிகளால் எழும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் என்றுதான் ஆளும் வர்க்கங்களாலும் ஆட்சியாளர்களாலும் எப்போதும் சித்தரித்துக் கையாளப்படுகின்றன. ஜனநாயகவாதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் என்று திரளும் அறிவு ஜீவிகள் (!) இவை சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை அல்ல, சமூகப் பொருளாதாரப் பிரச்சினை என்று கண்டுபிடிக்கிறார்கள். வளர்ச்சித் திட்டங்கள் இன்றிப் பின்தங்கிய நிலை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சமூக, பொருளாதாரக் காரணங்களால் எழும் பிரச்சினையாகப் பார்த்து அவற்றில் முன்னேற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்று கோருகிறார்கள். இந்தக் கண்டுபிடிப்புக்கு ஏற்ப, வட்டார வளர்ச்சித் திட்டங்கள் வகுப்பது, போலீசு, தேவையானால் இராணுவ ஒடுக்குமுறையை ஏவிவிடுவது என்ற அணுகுமுறையை அரசு மேற்கொள்கிறது.

ஆனால், இவை சட்ட ஒழுங்குப் பிரச்சினையும் அல்ல; சமூகப்

பேச்சு வார்த்தைக்கு முன்பாக, இ.க.க. (மாவோயிஸ்ட்) பிரதிநிதிகள் (இடமிருந்து) சுத்தார், ஜி. கல்யாண ராவ், வரவர ராவ் ஆகியோருக்கும், ஆந்திர உள்துறை அமைச்சர் கே. ஜனாரெட்டிக்கும் இடையே நடந்த அதிகாரபூர்வ சந்திப்பு



www.padippakam.com

பொருளாதாரப் பிரச்சினையும் அல்ல; முதன்மையாக அரசியல் பிரச்சினை யாகும்; அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சினையாகும். அதனால்தான் ஆயு தங்களைக் களைவது, அரசியல் நிர் ணய சட்டகத்துக்குட்பட்டுத் தீர்வு காண் பது என்ற இரு நிபந்தனைகளில் ஆளும் வர்க்கங்களும் ஆட்சியாளர்க ளும் அசையாது ஊன்றி நிற்கிறார்கள்.

நக்சலைட்டுப் புரட்சியாளர்களுக் கும், தேசிய இனப் போராளிகளுக்கும் இந்த உண்மை ''தெரியும்''. அதனால் தான் ''ஆயுதப் போராட்டம் மூலம் அர சியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது, ஒரு சித்தாந்தப் பிரச்சினை. அதன்மீது பேச்சுவார்த்தையே கிடையாது'' என்று நக்சலைட்டு புரட்சியாளர்களும், இந் திய அரசியல் அமைப்பிலிருந்து தனியே பிரிந்து போவதுதான் தங்கள் இலட்சியம் என்று தேசிய இனப் போரா ளிகளும் உறுதியாகக் கூறுகிறார்கள்.

ஆக, அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்பதை இருதரப்புக ளுமே நன்கு அறிந்தும் அதற்கான முயற்சியில் ஈடுபடுவது ஏன்?

ஆந்திர அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைக்குப் போன இ.க.க. (மாவோயிஸ்ட்) தூதுக்குழுவின் தலை வர் தோழர் ராமகிருஷ்ணா கூறுகிறார்,

''மூர்க்கத்தனமான அடக்குமுறைப் படைபலத்தால் மட்டும் இயக்கத்தை ஒடுக்கிவிட முடியாது என்பது தெளி வாகி விட்டது. இதனால், சில சமயங்க ளில் ஒப்பீட்டு ரீதியிலான அமைதியை உத்திரவாதப்படுத்தும் நோக்கத்திற் காக சில காலமாக நக்சலைட்டுகளோடு பேச்சுவார்த்தை என்ற கொள்கைக்காக ஆளும் வர்க்கங்களில் ஒரு பிரிவு வாதாடி வருகிறது. புரட்சிகர இயக்கங் கள் மற்றும் தேசிய விடுதலைப் போர்க ளின்பால் பலமுனை யுத்த தந்திரத் துக்கு அழுத்தம் தரும் தாழ்நிலை மோதல்களைக் கொண்ட ஏகாதிபத்திய யுத்தத் தந்திரத்தின் பிரிக்க முடியாத அங்கமாகவும் அது உள்ளது. சலுகை கள் மற்றும் சீர்திருத்தங்கள் மூலம் ஆயு தப் போராட்ட முனையை மழுங்கடிப் பதையும் இயக்கத்தை மாசுபடுத்துவ தையும் நோக்கமாகக் கொண்ட சண்டை நிறுத்தம் மற்றும் பேச்சு வார்த்தை ஆகியவற்றை அந்த யுத்த தந்திரம் உள்ளடக்கியிருக்கிறது.''

இதுதான் ஏகாதிபத்திய யுத்த தந்தி ரம் என்று தெரிந்தும், அதன் கூறுகள் அனைத்தையும் ஏற்று அமலாக்குவ தற்கு இ.க.க. (மாவோயிஸ்ட்) உடன் பட்டுச் செயல்படுவது பொதுவு டைமை புரட்சியாளர்களுக்கு உண்மை யில் வேதனையளிக்கக் கூடியதாக உள்ளது. இப்படிச் சொல்வது ஒரு மாற்று அமைப்பு என்ற முறையில் இ.க.க. (மாவேயிஸ்ட்) மீதான காழ்ப்பு ணர்வால் உந்தப்பட்டு வருவது அல்ல. இந்தப் பேச்சுவார்த்தையின் நோக்கம், குறித்து தோழர் ராமகிருஷ்ணா பின்வ ருமாறு கூறுகிறார்.



**இ.க.க. (மாவோயிஸ்ட்) சார்பாக பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட ஆந்திர மாநிலக் கமிட்டி செயலாளர் தோழர் ராமகிருஷ்ணா.**

***கேள்வி: பேச்சு வார்த்தை மூலம் நீங்கள் எதைச் சாதிக்க விரும்புகிறீர் கள்? இது நேர்மறையான முடிவுக்கு வழிவகுக்குமா?***

**பதில்:** பேச்சு வார்த்தைகள் மூலம் ஏதோ பாரிய மாற்றம் ஏற்ப டும் அல்லது மக்களின் அடிப்ப டைப் பிரச்சினைகள் ஏதாவது தீர்க் கப்படும் என்ற மாயை எங்களுக்கு இல்லை.

ஒரு குறுகிய காலத்திற்குத்தான் என்றாலும் கூட மாநிலத்தில் ஒப் பீடு ரீதியிலான ஒரு ஜனநாயக சூழலை உத்திரவாதப்படுத்துவ தற்கே பேச்சு வார்த்தைகளுக்குப் போகிறோம். மூன்று நோக்கங்கள் உள்ளன: ஒன்று, ஒடுக்கப்பட்ட மக் களுக்கு ஒரு ஜனநாயக வெளியை (space) ஏற்பாடு செய்து தருவது; அதன் மூலம் அவர்களின் அடிப்ப டைப் பிரச்சினைகள் மீது கிளர்ச்சி செய்வதற்கான, ஜனநாயக இயக்கத் தைக் கட்டுவதற்கான ஜனநாயக உரி மையை பெற்றுத் தரலாம்; இரண்டு; போலீசு ஆட்சியின் வழக் கமாகி விட்ட சிவிலியன் இலக்குக ளைத் தாக்குவதைத் தவிர்ப்பதன் மூலம் சமுதாயத்தில் வன்முறை யின் அளவைக் குறைக்கலாம்; மூன்று; விவாதங்களின் மூலம் மக்களுடைய பல்வேறு பிரச்சினை கள் மீது கவனத்தை ஈர்த்து அவற் றில் சிலவற்றுக்கு ஒரு ஜனநாயகத் தீர்வு காண்பதற்குக் கூட முயற்சிக்க லாம்.

புரட்சிகர இயக்கங்களின்பால் ஏகா திபத்தியம் மேற்கொள்ளும் யுத்ததந்தி ரத்துக்கு அனுசரணையான நோக்கங்க ளோடுதான் இ.க.க. (மாவோயிஸ்ட்) அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடு கிறது; இதை இங்கே மறைமுகமாக ஒப் புக் கொள்கிறது. ஆயுதங்களை வைத் துக் கொண்டு அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபடக் கூடாது என்ற ஒரே ஒரு நிபந்த னையை மட்டும் இ.க.க. (மாவோ யிஸ்ட்) ஏற்க மறுத்து வருகிறது. அதி லும் ஒரு சமரசத் தன்மையைப் புகுத்தும் விதமாக, அதன் தலைமைப் பிரதிநிதி பின்வருமாறு பேசியுள்ளார்.

''ஆயுதங்களின்றி அரசியல் பிரச் சாரத்தை நடத்துவது என்ற ஏழாவது பிரிவை நாங்கள் அடியோடு நிராக ரிக்கிறோம். மக்களுக்கும் கட்சிக் கும் கூட அது கடினமானது. சண்டை நிறுத்தத்துக்கு நாங்கள் ஒப் புக் கொண்டிருப்பதால் ஆயுதந் தாங் கிய எந்த நடவடிக்கையிலும் நாங் கள் ஈடுபடமாட்டோம் என்றும் உறு தியளித்தோம். சமூக விரோத சக்திக ளிடமிருந்து மக்களைப் பாதுகாப்ப தற்காக மட்டுமே ஆயுதங்கள் உள்ளன. ஆனால், சமூக விரோத சக் திகள் உள்ளதாலேயே நாங்கள் ஆயு தங்களை ஏந்திக் கொண்டு செல்லக்

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

**''சலுகைகள் மற்றும் சீர்திருத்தங்கள் மூலம் ஆயுதப் போராட்ட முனையை மழுங்கடிப்பதையும், இயக்கத்தை மாசுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட சண்டை நிறுத்தம் மற்றும் பேச்சு வார்த்தை ஆகியவற்றை ஏகாதிபத்திய யுத்த தந்திரம் உள்ளடக்கி இருக்கிறது'' என்கிறார் மாவோயிஸ்ட் கட்சியின் மையக் குழு உறுப்பினர் தோழர் பிரகாஷ். இந்த ஏகாதிபத்திய யுத்த தந்திரத்துக்கு அனுசரணையாக அக்கட்சி ஏன் நடந்து கொள்கிறது?**

www.padippakam.com

## வடிவுரிமைச் சட்டத் திருத்தம்

# இயற்கைச் செல்வங்களுக்கும் வந்தது ஆபத்து

இந்தியா உலக வர்த்தகக் கழகத்தில் இணைந்த பொழுது, நமது நாட்டின் 1970-ஆம் ஆண்டு வடிவுரிமைச் சட்டத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, அதற்குப் பதிலாக அமெரிக்காவில் இருப்பது போன்ற வடிவுரிமைச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது. சனவரி 1, 2005-க்குள் புதிய வடிவுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட வேண்டும் என்றும் உலக வர்த்தகக் கழகம் காலக்கெடு விதித்திருந்தது.

நமது நாட்டின் 1970-ஆம் ஆண்டு வடிவுரிமைச் சட்டத்தின்படி, மருந்துப் பொருட்கள், விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள், தாவரங்கள், நுண்ணுயிர்கள், விதைகள் ஆகியவற்றின் மீது வடிவுரிமை கோர முடியாது. மருந்துகள், இரசாயன உரங்களைத் தயாரிக்கும் செய்முறைக்கு மட்டும்தான் வடிவுரிமை வழங்கப்படும். ஒரு பொருளைப் பல்வேறு செய்முறைகளைப் பயன்படுத்தி தயாரிப்பதற்கும் இந்தியச் சட்டம் அனுமதி அளித்திருக்கிறது. ஆனால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய நாடுகளில் இருக்கும் வடிவுரிமைச் சட்டமோ, பொருட்களின் மீதே வடிவுரிமை வழங்குவதோடு, வடிவுரிமை பெற்ற பொருட்களைப் பல்வேறு செய்முறைகளைப் பயன்படுத்தி தயாரிப்பதைத் தடுத்து விடுகிறது.

உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, இந்திய வடிவுரிமைச் சட்டத்தில் ஏற்கெனவே இரண்டு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்திய வடிவுரிமைச் சட்டத்தை முற்றிலுமாக அமெரிக்க பாணியில் மாற்றியமைக்கும் அரசாணையை, கடந்த டிசம்பர் மாதம், நாடாளுமன்றத்துக்குக் கூடத் தெரியாமல் மைய அரசு அறிவித்தது. இப்பொழுது, மார்ச் மாதம் நடைபெறவுள்ள பட்ஜெட் கூட்டத் தொடரில் அந்த அரசாணையைச் சட்டமாக மாற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஒரு சட்டத்திற்குப் பதில் இன்னொரு சட்டம் வருகிறது என இந்த மாற்றத்தை சாதாரணமாகப் பார்க்க முடியாது. இந்த மாற்றத்தின் மூலம் இந்திய மக்கள் நோய் நொடியின்றி வாழ்வதற்கும் இந்திய அரசுக்கும் சம்மந்தம் கிடையாது. அதைப் பன்னாட்டு மருந்து கம்பெனிகள்தான் தீர்மானிக்கும் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொன்னால், தொற்று வியாதிக்குக் கொடுக்கப்படும் சிப்ரோஃபிளாக்சின் என்ற மருந்து இந்தியாவில் 29 ரூபாய்க்கு (500 மி.கி. கொண்ட 10 மாத்திரைகளின் விலை) விற்கப்படுகிறது. அமெரிக்காவிலோ இந்த 10 மாத்திரைகளின் விலை 2,352 ரூபாய். ''எய்ட்ஸ்'' நோயாளிகள் அமெரிக்க தயாரிப்பு மருந்துகளை வாங்க ஆண்டொன்றுக்கு 5,40,000 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருந்த பொழுது, இந்திய மருந்து நிறுவனங்கள் அதே மருந்தை 6,300 ரூபாய்க்குத் தயாரித்து விற்றன.

இந்தியாவில் பல்வேறு உயிர் காக்கும் மருந்துகள், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளை விட விலை மலிவாகக் கிடைத்ததற்கு 1970-ஆம் ஆண்டு இந்திய வடிவுரிமைச் சட்டம்தான் காரணமாக இருந்தது. இச்சட்டத்தை மாற்றுவதன் மூலம் 1970-க்கு முன்பிருந்த நிலையை - மருந்துகளின் உற்பத்தியையும், விலையையும் பன்னாட்டு மருந்து கம்பெனிகள் தான் தீர்மானிக்கும் என்ற நிலையை உருவாக்கப் போகிறார்கள். ''இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படும் மருந்துகளுள் ஏறத்தாழ 40 முதல் 60 சதவீத மருந்துகள் இப்புதிய வடிவுரிமை சட்டத்தின் கீழ் சென்று விடும்; சாதாரண தலை வலி, காய்ச்சல் மருந்துகள் கூட 300 சதவீதம் விலை உயரும்'' என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு மருந்தை, பல்வேறு செய்முறைகளைப் பயன்படுத்தி, பல்வேறு நிறுவனங்கள் தயாரிக்கும் முறையை இப்புதிய வடிவுரிமைச் சட்டம் தடுத்து விடுவதால், ஆயிரக்கணக்கான இந்திய மருந்து நிறுவனங்கள் இழுத்து மூடப்படும். ''அறிவுசார் கண்டுபிடிப்புகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கவும், அக்கண்டுபிடிப்புகளை மற்றவர்கள் முறைகேடாக 'காப்பி'யடிப்பதைத் தடுக்கவும்தான் புதிய வடிவுரிமைச் சட்டம் கொண்டு வரப்படுவதாக'' உலக வர்த்தகக் கழகம் கூறுகிறது. மாறாக, இச்சட்டம் மருந்து தயாரிக்கும் செய்முறைகளுக்குக் கட்டுப்பாடு விதிப்பதன் மூலம், புதிய பல்வேறு தரப்பட்ட கண்டுபிடிப்புகளுக்கு தடை போடுகிறது; போட்டியாளர்களைச் சந்தையில் இருந்து அகற்றுவதன் மூலம், பன்னாட்டு மருந்து நிறுவனங்களின் இலாபத்திற்குப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தருகிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையின்படி, ஒவ்வொரு நாடும் தனது மொத்த வருவாயில், 5 சதவீதத்தைப் பொது சுகாதாரத்திற்கும், மக்களின் உடல் நலத்திற்கும் செலவழிக்க வேண்டும். ஆனால் இந்திய அரசோ,

**அமெரிக்கா திணிக்கும் வடிவுரிமைச் சட்டத்தை எதிர்த்து உலகெங்கிலும் நடந்துவரும் போராட்டத்தின் ஒரு பகுதியாக, தென் ஆப்பிரிக்கா நாட்டில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்.**





படிப்பகம்

www.padippakam.com

இதற்குத் தனது வருவாயில் 0.9 சதவீத நிதியைத்தான் ஒதுக்குகிறது. இந்த அற்பமான நிதியையும், இனி பன்னாட்டு மருந்து கம்பெனிகளே தின்று தீர்த்து விடும்.

உதாரணத்திற்குச் சொன்னால், வெறிநாய்க்கடிக்கு இந்தியாவிலேயே தயாராகும் நரம்புத் திசு தடுப்பு மருந்தின் விலை நான்கு ரூபாய்தான். இந்த ஊசி மருந்தைத் தடை செய்துவிட்டு, அதற்குப் பதிலாக ''அபய்ராப்'' என்ற மருந்தைத்தான் பயன்படுத்த வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் கூறிவிட்டது.

பன்னாட்டு நிறுவனங்கள் தயாரித்து விற்கும் ''அபய்ராப்'' மருந்தின் விலை ரூ. 350. சென்னை புறநகர் பகுதியில் உள்ள குரோம்பேட்டை அரசு மருத்துவமனை இப்புதிய நாய்க்கடி மருந்தை வாங்க வேண்டும் என்றால், அதற்கு ஆண்டுக்கு நாற்பது இலட்சம் ரூபாய் தேவைப்படும். ஆனால், அம்மருத்துவமனைக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதி ரூ. 25 இலட்சம்தான். இந்த நிதியை புதிய நாய்க்கடி மருந்து வாங்கவே செலவழித்து விட்டால், மற்ற நோய்களுக்கு எப்படி சிகிச்சை அளிக்க முடியும்?

''பல்வேறு விதமான மருந்துகளின் மீது வடிவுரிமை கேட்டு 5,636 விண்ணப்பங்கள் வந்திருப்பதாகவும்; இவற்றுள் 4,398 விண்ணப்பங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் அனுப்பியிருப்பதாகவும்'' இந்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறது. இந்த விண்ணப்பங்கள் எல்லாம் புதிய கண்டுபிடிப்புகளுக்குதான் வடிவுரிமை கோருகின்றன எனச் சொல்ல முடியாது. ஏனென்றால், புதிய வடிவுரிமைச் சட்டம் ''கண்டுபிடிப்புகளுக்கு''ப் பல ஓட்டைகளைக் கொண்ட விளக்கத்தைத்தான் தருகிறது. இதனால், பழைய மருந்தைக் கூட புதிய நோய்க்குப் பயன்படுத்த முடியும் எனக் கூறி, வடிவுரிமையைப் பெற்றுவிடலாம் என இந்திய மருந்து நிறுவனங்களே உண்மையைப் புட்டு வைத்துள்ளன.

1970-ஆம் ஆண்டு வடிவுரிமை சட்டத்தில் இப்படி முறைகேடாக வடிவுரிமை பெறுவதைத் தடுக்க வழி இருந்தது. அச்சட்டத்தின்படி, வடிவுரிமை கொடுப்பதற்கு முன்பே, அதனை எதிர்த்து வழக்குத் தொடுக்க முடியும். ஆனால், தற்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள திருத்தத்தில் இப்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக வடிவுரிமை கொடுத்த பிறகு வழக்கு தொடரலாம் என்ற பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, தும்பை விட்டு வாலைப் பிடிக்கச் சொல்லுகிறது, மைய அரசு.

**மலேரியா, காலரா, காசநோய் போன்ற தொற்று வியாதிகள் தான் அடித்தட்டு மக்களைத் தாக்குகின்றன; ஆனால், பன்னாட்டு நிறுவனங்களோ ''எய்ட்ஸ்'', ''வயாகரா'' பற்றிதான் ஆராய்ச்சி நடத்துகின்றன.**

இப்புதிய வடிவுரிமை சட்டத்தால், மருந்து - மாத்திரைகளின் விலை தாறுமாறாக உயர்ந்துவிடும் என்பது ஒருபுறமிருக்கட்டும்; நமது நாட்டிற்குத் தேவைப்படும் அத்தியாவசியமான உயிர் காக்கும் மருந்துகள் தடையின்றிக் கிடைக்கும் என்பதற்குக் கூட இனி எந்த உத்திரவாதமும் கிடையாது.

மலேரியா, காலரா, காச நோய், மஞ்சள் காமாலை போன்ற தொற்று நோய்கள்தான் அடித்தட்டு மக்களைத் தாக்குகின்றன. சாதாரண மலேரியா நோயோடு இப்பொழுது மனித மூளையைத் தாக்கும் புதுவகை மலேரியா நோய் கூட வந்துவிட்டது. இதற்குத் தேவையான சிகிச்சைக்கு, மருந்து மாத்திரைக்கு அடித்தட்டு மக்கள் அரசாங்க மருத்துவமனைகளை நோக்கிதான் ஓடுகிறார்கள். அரசாங்கமோ மருந்து - மாத்திரைகளுக்கு பன்னாட்டு மருந்து கம்பெனிகளை நம்பியிருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களோ, தங்களுக்கு இலாபத்தை அள்ளித் தரும் ''வயாகரா'', ''எய்ட்ஸ்'' பற்றிதான் ஆராய்ச்சி நடத்துகின்றனவேயொழிய, தொற்று நோய்கள் பற்றி அக்கறை காட்டுவது கிடையாது.

கொள்ளை நோய்கள் ஒரு நாட்டைத் தாக்கினால், அதற்குத் தேவையான மருந்து - மாத்திரைகளுக்குப் பன்னாட்டு மருந்து கம்பெனிகளை நம்ப முடியாது என்பதை உலக வர்த்தகக் கழகம் கூட ஒப்புக் கொண்டுள்ளது. அதனால்தான், தொற்று நோய் தாக்கும் அவசர காலங்களில், வடிவுரிமைச் சட்டத்தை மீறி, தொற்று நோய் தாக்கப்பட்ட நாடே மருந்துகளைத் தயாரித்துக் கொள்ளலாம் என்ற சலுகையை உலக வர்த்தக கழகம் வழங்கியிருக்கிறது.

இந்தச் சலுகை நாயிடம் கிடைத்த தேங்காயைப் போன்றது. ஏனென்றால், ஒரு நாடு தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை உலக வர்த்தகக் கழகம்தான் தீர்மானிக்கும். உலக வர்த்தகக் கழகம் தீர்மானித்த பிறகு, தொற்று நோய் தாக்கப்பட்ட நாடு இந்தச் சலுகையைப் பயன்படுத்தி மருந்துகளைத் தயாரித்து, நோயாளிக்குக் கொடுப்பதற்குள் நிலைமை கையை மீறிப் போய்விடும். எனவே, அடித்தட்டு மக்கள் தங்களை நோயிலிருந்து காத்துக் கொள்ள, பழைய காலம் போல மாந்தரீகம், நாட்டு வைத்தியத்திற்குத் திரும்ப வேண்டியதுதான்!

இப்புதிய வடிவுரிமைச் சட்டம் மக்களின் உயிரோடு மட்டும் விளையாடப் போவதில்லை; இந்தியாவின் முதுகெலும்பான விவசாயத்திலும் கைவைக்கப் போகிறது. இப்புதிய வடிவுரிமைச் சட்டத்தின்படி விதைகள், தாவரங்களை வடிவுரிமை செய்து கொள்வதற்கு இனி தடையேதும் கிடையாது. இதற்குத் தகுந்தாற்போல, இந்திய விதைகள் சட்டத்திலும் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

விவசாயிகள் விதைகளைச் சேமித்து வைத்துக் கொள்ளவும்; விதைகளை மறு உற்பத்தி செய்து கொள்ளவும்; விதைகளை சக விவசாயிகளுக்கு விற்கவும் (1966-ஆம் ஆண்டு விதைகள்) சட்டம் அனுமதி அளித்திருந்தது. ஆனால், தற்பொழுது இச்சட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தத்தின்படி, விதைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகள், தங்களின் பெயரைக் கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

அதாவது, இனி விதை நெல்லைக் கூட தங்களின் இஷ்டத்திற்கு விவசாயிகள் சேமித்து வைக்கக் கூடாது; அப்படி எடுத்து வைத்தால் அது சட்டவிரோதம் என விவசாயிகளை மிரட்டுகிறது, மைய அரசு. இம்மிரட்டலின் மூலம் வடிவுரிமை பெற்ற பன்னாட்டு நிறுவனங்களின் விதைகளை மட்டுமே விவசாயிகள் பயன்படுத்த முடியும் என்ற நிலையை உருவாக்க முயலுகிறது.

இந்திய மக்களின் உணவுத் தேவைக்கும், அவர்கள் நோய் நொடியின்றி வாழ்வதற்கும் ஏகாதிபத்தியங்களை நத்திப் பிழைக்க வேண்டும் என்றால், இந்திய சுதந்திரத்தின் பொருள் தான் என்ன?

• செல்வம்

www.padippakam.com

# வட்டமிடும் பன்னாட்டு நிறுவனங்கள் இரையாகும் கிராமப் பொருளாதாரம்

வேலையில்லாத் திண்டாட்டம், ஆட்குறைப்பு - ஆலை மூடல், விலைவாசி உயர்வு ஆகியவற்றின் காரணமாக நகர்ப்புறவர்க்கத்திடம் பொருளாதார தேக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால், கடந்த சில ஆண்டுகளாக சந்தையின் அளவு விரிவடையவில்லை. இந்தப் பின்னணியில், நகர்ப்புறத்தில் புதிய நுகர்வோர்களை கவர்ந்திழுக்க முடியாமல் பன்னாட்டு நிறுவனங்கள் திணறுகின்றன. பழைய வாடிக்கையாளர்களையே மீண்டும் குறிவைத்து விற்பனைக்கான தாக்குதலைத் தொடுக்கின்றன. பல்வேறு விளம்பரங்கள் மேற்குறிப்பிட்ட விசயத்தை உறுதிப்படுத்துகிறது.

உதாரணமாக, ''சன்சில்க் ஷாம்பு'' விளம்பரத்தில், ''சன்சில்க் உபயோகிப்பதை தினமும் ஓர் பழக்கமாக்குங்கள்'' என்பதும் ''இரவிலும் கிருமிகள் பற்களை தாக்குகின்றன; ஆகையால் இரவிலும் பல் துலக்க வேண்டும்'' என்று வலியுறுத்தும் விளம்பரமும் மேற்குறிப்பிட்ட விசயத்தை தெளிவுபடுத்துகிறது. இருப்பினும் சந்தை விரிவடைதற்கான வாய்ப்புகளோ, அறிகுறிகளோ தெரியவில்லை. ஆரம்பத்தில், 10 சதவீத மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கமே வாடிக்கையாளர்கள்; மீதம் 90 சதவீத பேர் பற்றி கவலையில்லை என்று கூறிய இந்நிறுவனங்கள், நகர்ப்புற பொருளாதார தேக்கத்தின் பின்னணியில் புதிய களங்களைத் தேட ஆரம்பித்தன. இதன் விளைவாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக பன்னாட்டு நிறுவனங்களின் இலாப வெறிக்கான புதிய இரையாக கிராமங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன.

## கிராமச் சந்தையின் பின்புலம்

நம் நாட்டின் 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் தொகையில், கிட்டதட்ட 75 கோடி மக்கள் கிராமங்களில் உள்ளனர். இம்மக்கள் 6.4 லட்ச கிராமங்களில் வசிக்கின்றனர். இதில், ஒரு லட்ச கிராமங்கள் 2000 முதல் 10,000 வரையும், 2.2 லட்ச கிராமங்கள் 500-க்கும் குறைவான மக்கள்தொகையும் கொண்டவையாகும். முதலில் கூறப்பட்ட ஒரு லட்ச கிராமங்கள் ஒட்டுமொத்த கிராம மக்கள் தொகையில் 50 சதம் கொண்டதாகவும் 60 சதவீத கிராம பொருளாதாரம் கொண்டதாகவும் உள்ளது. அன்றாட மற்றும் துரித தேவையான பொருட்கள் (Fast moving consumer goods - FMCG) ஆன பற்பசை, சோப், பவுடர் போன்ற பொருட்களின் கிராமச் சந்தை மதிப்பு ரூ. 65,000 கோடியாகவும், டி.வி. மற்றும் குளிர்சாதன பெட்டி போன்ற வகையறாக்களின் சந்தை மதிப்பு ரூ. 5000 கோடியாகவும், விவசாய இடுபொருட்களின் சந்தை மதிப்பு ரூ. 45,000 கோடியாகவும், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன சந்தை மதிப்பு ரூ. 8,000 கோடியாகவும் உள்ளது. அதாவது, மொத்த இந்திய கிராமச் சந்தையின் ஆண்டு மதிப்பு ரூ. 1,23,000 கோடியாகும் (Francis kanoi,2002). இந்த பிரமாண்டமான சந்தையில் 35 முதல் 44 சதம் வரை மட்டுமே பன்னாட்டு மற்றும் இந்திய தரகு முதலாளிகளால் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மீதியுள்ள சந்தையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பல்வேறு தடைகள் இருக்கின்றன. குறிப்பாக, இந்திய கிராமங்கள் மிகவும் விரிந்து பரந்து பல்வேறு புவியியல் அமைப்புகளில் உள்ளன. மேலும் 30 சதவீத கிராமங்கள் சொற்பமான மக்கட் தொகையே கொண்டுள்ளது. சாலை மற்றும் போக்குவரத்து வசதிகள் இல்லை. கிராம மக்கள், பாரம்பரியத்தாலும் உழைக்கும் வர்க்கக் கலாச்சாரத்தினாலும் பின்னிப் பிணையப்பட்டுள்ளார்கள்; அவர்களின் வாங்கும் சக்தி குறைவாக உள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களை பற்றிய விழிப்புணர்வு அவர்களிடம் குறைவு. விழிப்புணர்வை உருவாக்குவதற்கான வாய்ப்புகளும் குறைவாகவே உள்ளது. ஆனால், மக்கள் அல்லும் பகலுமாய் சுழற்சியாய் உழைத்துக் கொண்டு, பொருளாதாரத்தை ஈட்டி தமது தேவையை உள்ளூர் மற்றும் அருகாமையில் உற்பத்தியாகும் பொருட்களின் மூலம் ஈடேற்றிக் கொள்கின்றனர். இவ்வளவு சிக்கல்கள் இருப்பினும், இந்த ஏழை - எளிய கிராம மக்களிடம் உள்ள சொற்ப செல்வங்களைக் கூட கொள்ளையடித்தே ஆகவேண்டும் என்கிற வெறியில், பன்னாட்டு மற்றும் தரகு முதலாளிகளுக்கு நம்பகமான தொழிற் கூட்டாளிகள் தேவைப்படுகிறார்கள். யார் இவர்களின் நம்பகமான கூட்டாளி?

## நம்பகமான கூட்டாளிகள்

ரூ. 1,23,000 கோடி மதிப்புள்ள கிராமச் சந்தையை அடைவதற்கு பல்வேறு திறம்பட்ட கூட்டாளிகள் தேவைப்படுகின்றனர். கிராம மூலை முடுக்கெல்லாம் சென்றடைய சங்கிலித் தொடர் வலைப்பின்னலைக் கொண்ட அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் தேவை; கிராம பாரம்பரியத்தையும் உழைக்கும் மக்களின் கலாச்சார பின்னணியையும் உடைத்தெறிந்து நுகர் வெறி கலாச்சாரத்தைத் திணிக்கக் கூடிய ஊடகங்களும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் தேவை. மேற்குறிப்பிட்ட அம்சங்களை ஏற்படுத்திக் கொடுக்க-தேவையான முதலீட்டைக் கொடுக்க, நிதி நிறுவனங்கள் தேவை. சாராம்சமாக, குறைந்த முதலீட்டை போட்டு அதிக லாபத்தை எடுக்க என்னென்ன அம்சங்கள் தேவைப்படுகிறதோ அவற்றை முடித்துக் கொடுக்கிற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் கூட்டாளிகளாகத் தேவை. இந்தப் பின்னணியில் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களின் நம்பகமான, திறமையான கூட்டாளிகளாக தன்னார்வக் குழுக்கள், மகளிர் அமைப்புகள், சுயஉதவிக் குழுக்கள், கூட்டுறவு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்த்துக் கொண்டன.

## தன்னார்வக் குழுக்கள் மற்றும் அதன் துணை அமைப்புகள்

தன்னார்வக் குழுக்கள் நாடு முழுவதும் கிராமங்களில் பல லட்சக்கணக்கான சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் அமைப்புகள், கூட்டுறவு குழுக்கள் அமைத்துக் கொண்டு வருகின்றன. 2005 இறுதிக்குள் 14 லட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் நம் நாட்டில் கட்டப்பட்டிருக்கும். சில கிராமங்களில் 20-க்கும் மேற்பட்ட சுய உதவி குழுக்கள் இருக்கின்றன. இந்த வலைப்பின்னல் பல்வேறு வகைகளில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது. சுய உதவி குழுக்கள், நுண் தொழில் மூலம் (micro


படிப்பகம்

www.padippakam.com

enterprise) மூலம் சுயசார்பு பெற்று வருவதாக செய்தி ஊடகங்களில் தன்னார்வக் குழுக்கள் பெருமையாக பீற்றிக் கொள்கின்றன. ஆனால் யதார்த்த நிலையோ வேறு.

பன்னாட்டு நிறுவனமான "ஹிந்துஸ்தான் லீவர்" 2001-ஆம் ஆண்டில் 4 மாநிலங்களில் 52 மாவட்டங்களில் உள்ள 5000 கிராமங்களுக்கு தங்கள் பொருட்களை விற்பதற்காக பல்வேறு தன்னார்வக் குழுக்கள் மற்றும் அதனின் சுயஉதவிக் குழுக்களுடன் கூட்டு வைத்து விற்பனையை ஒத்திகை பார்த்தது. இந்த வெற்றியின் பின்னணியில், இவ்வழிமுறையை 8 மாநிலங்களுக்கு விரிவுபடுத்தி 130 மாவட்டங்களில் பல லட்சக்கணக்கான மக்களை இந்நிறுவனத்தினர் சென்றடைகின்றனர். இத்திட்டத்திற்கு சுய உதவி குழுக்களிலிருந்து பெண்களை, தன்னார்வக் குழுக்களின் மேற்பார்வையில் தேர்ந்தெடுத்து பொருட்களை விற்பதற்கான பயிற்சியையும், சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றி கிராம மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளையும் இந்நிறுவனத்தினர் கற்றுத் தருகின்றனர்.



ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கிராமமொன்றில், ஐ.டி.சி. நிறுவனம் அமைத்திருக்கும் இணைய தள மையம்.

இப்படி பயிற்சி அளிக்கப்பட்ட பெண்களுக்கு "சக்தி அம்மா" என்ற பட்டத்தையும் சூட்டுகின்றனர். சக்தி அம்மாக்கள் கிராமங்களுக்குச் சென்று சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றி போதித்து "குளோசப்" மற்றும் "பெப்சோடெண்ட்" பயன்படுத்துங்கள் என்றும், ஆலும் வேலும் பல்லுக்கு உறுதியில்லை என்றும், 50 பைசாவுக்கு "கிளினிக் ப்ளஸ்" இருக்கும் பொழுது சீயக்காய் எதற்கு என்றும் கூறி விற்பனை செய்கிறார்கள். பள்ளிக்கூடங்களுக்குச் சென்று பற்களில் கிருமி தாக்குதலை பற்றி வகுப்பும் எடுக்கிறார்கள்.

மறுபுறம், தன்னார்வக் குழுக்கள் ஸ்டாக் ஏஜெண்டாகவும், கிராமச் சந்தையை ஆய்வு செய்து கொடுக்கும் நிறுவனமாகவும் செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஆசியாவின் மிகப் பெரிய தன்னார்வ குழுவான "பெய்ப்" (Baif)யும், இந்தியாவின் மிகப் பெரிய வலைபின்னலை கொண்ட "கேர்" (Care) என்ற தன்னார்வ குழுவையும் கொண்டுள்ளது. பெயிப் நிறுவனம் கீழிருந்து தனியார்மயத்தை (Bottom-up approach) நடைமுறைப்படுத்தும் வேலையைச் செய்து வருகிறது. "கேர்" என்பது பல்வேறு நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்களின் ஏஜெண்டாக செயல்படுகிறது. சமீபத்தில் இராக்கின் "கேர்" நிறுவனத் தலைமையை இராக் போராளிகள் கடத்தி சென்று கொன்று விட்டனர். (இதற்காக "இந்து" போன்ற நாளிதழ்கள் "கேர்" தலைவரின் சேவையைப் புகழ்ந்து அழுது தீர்த்தன). இப்படி 133 தன்னார்வ குழுக்கள் மற்றும் அதன் துணை அமைப்புகளுடன் செயல்பட்டு பன்னாட்டு நிறுவனங்கள் ரூ. 600 கோடி மதிப்புள்ள பொருட்களை கிராமங்களில் விற்றுள்ளன. இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, ஒரு கோடி மக்களைச் சென்றடைய வேலைகளை முடுக்கி விட்டு வருகிறார்கள், ஹிந்துஸ்தான் லீவர் அதிகாரிகள்.

இந்தப் போக்கைப் பயன்படுத்தி 75 கோடி மக்களைக் கபளீகரம் செய்ய ஐ.டி.சி., ஐ.சி.ஐ.சி.ஐ., பிலிப்ஸ் போன்ற நிறுவனங்கள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கின்றன. மேற்குறிப்பிட்ட விபரங்களிலிருந்து தன்னார்வக் குழுக்கள் ஏகாதிபத்தியத்தின் இன்னுமொரு கைக்கூலி பட்டாளமே என்பது நிரூபணமாகிறது.

## தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்

தற்சமயம் செய்தி ஊடகங்களான வானொலி, பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி 57 சத கிராம மக்களைத்தான் சென்றடைகிறது. பெரும்பான்மையான கிராமங்களில் தொலைபேசி இல்லை. கணினி, இணையம் என்பதோ நகரத்துடன் முடிந்து விடுகிறது. மறுபுறம், நகரத்தில் மேற்குறிப்பிட்ட விசயங்கள் எதிர்மாறாக உள்ளன. இந்தப் பின்னணியில், முதலாளித்துவ அறிவுஜீவிகள் நகரத்திற்கும் கிராமத்திற்கும் அல்லது பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையில் நிலவுகின்ற டிஜிட்டல் பாகுபாட்டை (digital divide) குறைப்பது மூலம் ஏழை - எளிய மக்கள் பல்வேறு புதிய தகவல்களைப் பெற்று தங்கள் வாழ்க்கையின் தரத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்று கூறி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, சில ஆண்டுகளுக்கு முன்பு சுவாமிநாதன் அறக்கட்டளை, புதுவையில் பல்வேறு கிராமங்களில் கணினி மற்றும் இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது. தகவல் தொழில்நுட்ப துறையில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட விசேட் (Vsat) மற்றும் கோர்டெக்ட் (cordect) தொழில்நுட்பத்தினால் டெலிபோன் இல்லாத கிராமங்களுக்கும் எந்த கம்பிகள் இல்லாமல் இணையம் மற்றும் தொலைபேசி வசதியைச் செய்து கொடுக்கக்கூடிய சூழ்நிலையில், என்-லாக் (N-logue) என்ற சென்னை ஐ.ஐ.டி. நிறுவனம், பல்வேறு தன்னார்வக் குழுக்கள், தரகு முதலாளித்துவ மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் கணினியையும் இணையத்தையும்

www.padippakam.com

கிராமம் கிராமமாக நிறுவிக் கொண்டு வருகின்றன. இன்னொருபுறம், சில மாநில அரசுகள் (குறிப்பாக, ஆந்திரா) மேற்குறிப்பிட்ட வேலையை செய்து வருகின்றன.

அரசின் திட்டக் குழுவில் இருக்கும் சுவாமிநாதன், சுனாமி தாக்குதலின் பின்னணியில் ''கிராமங்களில் இணைய நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தால் மக்களைக் காப்பாற்றியிருக்கலாம்; ஆகையால், அரசு இவ்விசயத்தில் மெத்தனப்போக்கு காட்டக்கூடாது'' என்கிறார். ஆனால், சுவாமிநாதனுக்கு உண்மை தெரியாமல் இல்லை. ''அமெரிக்காவின் கூட்டாளியான இங்கிலாந்து இரானுவத்துக்கே தகவல் கொடுக்காமல் அமெரிக்கா இருட்டடிப்பு செய்தது'' (பார்க்க: ''இந்து'', ஜனவரி 8, 2005). இருப்பினும் தன் ஏகாதிபத்திய சேவையை, சுனாமியில் உயிரிழந்த ஏழை மக்களின் பிணங்களின் மேல் செய்யத் துடிக்கிறார், அவர்.

நம் நாட்டில் தற்சமயம் 60,000-க்கு மேற்பட்ட கிராமங்கள் இணைய வசதியால் இணைக்கப்பட்டுள்ளன. ஐ.டி.சி. நிறுவனம் மட்டும் 5000-க்கும் மேற்பட்ட கிராம இணைய நிலையங்களை நிறுவி 30 லட்ச மக்களைத் தனது கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. இந்நிறுவனம் நாள் ஒன்றுக்கு 30 புதிய கிராமங்களை இணையத்தின் வலையில் இணைக்கிறது.

மரபு செய்தி ஊடகங்களான டி.வி., வானொலி மற்றும் பத்திரிகைகள், ஒரு வழி செய்தி ஊடகமாகும். பயனீட்டாளர் முனையிலிருந்து செய்தி பரிமாற்றம் செய்வதற்கு வாய்ப்புகள் குறைவு. மாறாக, இணையத்தின் மூலம் பயனீட்டாளர் முனையிலிருந்து செய்திகளை மற்றும் தகவல்களை பல்வேறு இடங்களுக்கு அனுப்ப முடியும். அதாவது, இணைய தொழில்நுட்ப வளர்ச்சியில் இரு வழி தொடர்பு என்பது எளிதாகி விட்டது. இந்த கூடுதல் அம்சம் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான தகவல் பரிமாற்றம் மற்றும் புதிய மாற்றங்களைக் கண்டறிவதை எளிதாகி விட்டது. இந்த தொழில்நுட்பத்தை வைத்துக் கொண்டு அரசு இணைய கல்லூரிகளை உருவாக்கலாம், அரசு பற்றிய திட்டங்களை வெளியிடலாம், மக்களின் குறைகளைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால்,



**கிராம இணைய நிலையங்கள் மூலம் கிராமச் சந்தை தேவையை அறிந்து கொள்வது, விநியோக சங்கிலியை ஒருங்கிணைப்பது, கச்சாப் பொருட்களை கொள்முதல் செய்வது, ஒப்பந்த விவசாயத்தை விரிவுபடுத்துவது, நுகர்வெறியைத் தூண்டுவது முதலானவை எளிதாக ஆக்கப்பட்டு வருகின்றன.**

இவைகளெல்லாம் நடப்பதற்கு வாய்ப்புகள் குறைவு.

மாறாக, பன்னாட்டு நிறுவனங்கள் கிராமச் சந்தையை சீர்படுத்தி ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் நுகர்வெறி கலாச்சாரத்தை தூண்டி விடுவதற்கும் தான் உபயோகப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, ஐ.டி.சி. நிறுவனம் கிராம இணைய நிலையங்கள் மூலம் ரூ. 450 கோடிக்கு வியாபார பரிமாற்றம் செய்துள்ளது. அதன் புதிய சிகரெட் நுகர்வோர்களில் 10 முதல் 15 சதம் பேர் கிராம இணைய நிலையத்தின் மூலம் வந்தவர்கள் ஆவார்கள்.

டாடா, மகேந்திரா அண்டு மகேந்திரா, ஹிந்துஸ்தான் லீவர், தான் அகடெமி, இ.ஐ.டி. பாரி மற்றும் பல்வேறு நிறுவனங்கள், தன்னார்வக் குழுக்கள் துணையுடன் பல ஆயிரக்கணக்கான கிராமங்களை இணையத்துடன் இணைத்த வண்ணம் இருக்கின்றன். இந்த கிராம இணைய நிலையங்கள் மூலம் கிராமச் சந்தை தேவையை அறிந்து கொள்வது, விநியோக சங்கிலியை ஒருங்கிணைப்பது, கச்சாப் பொருட்களை கொள்முதல் செய்வது, ஒப்பந்த விவசாயத்தை விரிவுபடுத்துவது, நுகர்வெறியைத் தூண்டுவது முதலானவை எளிதாக ஆக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அரசும் மற்ற பங்கேற்பாளர்களும் மேற்குறிப்பிட்ட விசயங்களைக் கூறாமல், நடப்பதை மறைத்து கிராம வளர்ச்சிக்கும், தகவல் பரிமாற்றத்திற்கும் தான் இவை செய்யப்படுகிறது என்கிறார்கள்.

### நிதி நிறுவனங்கள்

பன்னாட்டு நிறுவனங்களின் உத்திரவாதத்தில் கடன் கொடுக்கவும் தங்களுடைய சேவைத் திட்டங்களை கிராமப்புறங்களில் விற்கவும் பல நிதி நிறுவனங்கள் புற்றீசல் போல் கிராமத்தை நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருக்கின்றன. பன்னாட்டு மற்றும் தரகு முதலாளிகளின் மேற்பார்வையில் இயங்கும் தன்னார்வக் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுடைய நுண்கடன் சந்தையின் மதிப்பு 15 முதல் 45 ஆயிரம் கோடியாகும். இக்கடன்களை திருப்பிப் பெற்று தர, பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வக் குழுக்கள் இருப்பதால் மிகவும் இலாபகரமானதாக கருதப்படுகிறது.

தன்னார்வக் குழுக்களோ, பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவை செய்யக்கூடிய திட்டங்களுக்கு மட்டுமே உத்திரவாதம் தர முன் வருகிறது. அதாவது, கிராம இணைய நிலையங்கள் வைப்பதற்கும், பன்னாட்டு நிறுவன பொருட்களை விற்பதற்கும் சுய உதவிக் குழுக்கள் நுண்கடன்களை வாங்க உத்திரவாதம் கொடுக்கிறது. தன்னார்வக் குழுக்களின் பிரதான வேலை, அசலையும் வட்டியையும் கறாராகப் பெற்று நிதி நிறுவனங்களுக்கு கொடுக்க வேண்டும்; அதாவது, அடியாள் வேலை!

உலக வங்கியின் வளர்ச்சி அதிகாரியாகப் பணியாற்றி நூறுக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களை உருவாக்கும் போக்கில், நுண்கடன் உள்நோக்கங்களைப் புரிந்து கொண்ட டாக்டர் சுதிர்ரேந்தர் சர்மா, அவ்வேலையிலிருந்து விலகிக் கொண்டார். அவரின் கூற்றுப்படி, ''நுண் கடன் என்பது செயற்கையான பணப் புழக்கத்தை ஏற்படுத்துகிறது; இந்த நுண் கடன் மூலம் பெரும்பான்மையான தன்னார்வக் குழுக்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் கொழுத்த இலாபத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ பெறுகின்றன; மேலும்


படிப்பகம்

www.padippakam.com

இந்நுண்கடன்கள், சமூக உணர்வு, அரசியல் விழிப்புணர்வு மற்றும் வாழ்வுரிமைப் பாதுகாப்பை அடியோடு அரித்து விடுகிறது; நுண்கடன் என்பது மாபெரும் சதி வலை (Micro loan is a Macro trap)'' என்கிறார்.

இன்னொருபுறம், பன்னாட்டு நிதி நிறுவனங்கள், பொது மற்றும் ஆயுள் காப்பீடு சேவை திட்டங்களை கிராமங்களில் விற்கவும் முனைந்துள்ளன. குறிப்பாக, ஐ.சி.ஐ.சி.ஐ. போன்ற தரகு பெரு முதலாளித்துவ நிறுவனங்கள் புதிதாக களத்தில் இறங்கியுள்ளன. இந் நிறுவனம் பயிர் மற்றும் கால்நடை, மழை போன்ற காப்பீடுகளில் இறங்கியுள்ளது. ஆந்திராவில் மெகபூப் நகர் மாவட்டத்தில் மழைக்கான காப்பீடுகளை விவசாய அமைப்புகளிடம் விற்று ஒத்திகை பார்த்துள்ளது.

விவசாயம் போண்டியாகி வரும் பின்னணியில், எண்ணற்ற விவசாயிகள் தற்கொலையைத் தீர்வாகக் கொண்டுள்ள சூழ்நிலையில், இந்நிறுவனங்கள் இருக்கும் மிச்ச மீதியையும் கொள்ளையடிக்கத் திட்டமிடுவதோடு ஒத்திகையும் பார்த்து வருகின்றன. ஆந்திர மாநிலத்தில் மட்டும் விவசாயிகள் மற்றும் இதர கிராம மக்கள் தங்கள் ஆயுட் காப்பீட்டுக்காக எல்.ஐ.சி.யிடம் ரூ. 1000 கோடி அளவுக்கு பிரிமியம் கட்டியுள்ளார்கள். அண்மைக்காலமாக சந்தையின் வீழ்ச்சியாலும் வறட்சியாலும் பிரிமியத்தைத் தொடர்ந்து கட்ட முடியவில்லை. வாடிக்கையாளர்கள் மரணத்தை தழுவிக் கொண்டிருக்கும் நேரத்தில், விதிமுறைகளை காட்டி, மக்கள் கட்டிய ரூ. 1000 கோடியையும் எல்.ஐ.சி. விழுங்கிக் கொண்டு விட்டது. அரசு சார்ந்த நிறுவனத்திடம் சிக்கியவர்களின் நிலைமை இப்படியிருக்கும் பொழுது, பன்னாட்டு நிறுவனங்களிடம் ஏதேனும் எதிர்பார்க்க முடியுமா?

பதினைந்து ஆண்டுகளாக தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய பொருளாதார கொள்கையின் விளைவாக, விவசாயிகள் வாழ்வுரிமை இழந்து குற்றுயிருடன் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், இருக்கும் மிச்ச சொச்சங்களையும் கொள்ளையடிக்க கிராம வளர்ச்சி என்கிற போர்வையில் பிணந்தின்னிக் கழுகுகளாக தன்னார்வக் குழுக்கள், பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய தரகு முதலாளிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கிராமங்களை வட்டமிட்டு கொண்டிருக்கின்றன.

● செஞ்சுடர்

# அது வேறு, இது வேறு.....
# நீங்கள் யாரு?

நிலப்பிரபுத்துவ காட்டுமிராண்டித்தனமான ஜல்லிக்கட்டு விளையாட்டை தமிழனின் வீர விளையாட்டாகச் சித்தரித்து பல வண்ணத்தில் அட்டை; ஒரே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மலர்க்குழுவில் அங்கம் வகிக்க, தாமே தயாரித்த பொங்கல் சிறப்பிதழுக்கு தமக்குத்தாமே நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்ளும் சுய தம்பட்டம்; சுனாமியால் பல லட்சம் தமிழர்கள் வாழ்விழந்து வேதனையில் பரிதவிக்கும் போது, எவன் செத்தாலென்ன? என்று கோலம் போட்டு பானையை அடுப்பிலேற்றி பொங்கல் வைத்துக் கொண்டாடச் சொல்லும் காசி ஆனந்தனின் வக்கிர உணர்ச்சிக் கவிதை; தமிழ் தேசியப் புரட்சிக்கு வழிகாட்ட ஒரு குறிப்பிட்ட தத்துவமோ, சித்தாந்தமோ, ஒரே கொள்கைக்கான அமைப்போ சாத்தியமில்லை, பல தரப்பட்ட சித்தாந்தங்களும் பலதரப்பட்ட அமைப்புகளும் கொண்ட பன்மைத்துவமாகவே தமிழ் தேசியம் இருக்கும் என்று நவீன அண்ணாயிசத்தைக் கடைவிரித்துள்ளார், பெ. மணியரசன் - இப்படி தமிழினப் பிழைப்புவாதத்தின் இன்னுமொரு பன்மைத்துவ கலவையாக தமிழ்த் தேசியப் பொதுவுடைமைக் கட்சி தனது ''தமிழர் கண்ணோட்டம்'' பொங்கல் மலரை முதன்முறையாக வெளியிட்டுள்ளது. தமிழ் மொழி காக்க, ''ஆங்கிலவழி கல்வி முறைக்கு எதிர்ப்பு'' என்று சவடால் அடித்து வந்த இக்கட்சி, இப்பொங்கல் மலரில் ஒரு மெட்ரிக்குலேசன் பள்ளி விளம்பரத்தையும் வெளியிட்டுள்ளது. முன்னாளில் அக்கட்சியின் தலைமையிலான தமிழக மாணவர் முன்னணியில் செயல்பட்ட தோழர் கரிகாலன், த.தே.பொ.க. வின் செயலாளரும் பொங்கல் சிறப்பிதழ் மலர்க் குழு ஒருங்கிணைப்பாளருமான பெ.மணியரசனுக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை பு.ஜ. இதழுக்கும் அனுப்பியுள்ளார். மணியரசன் குழுவின் சவடாலையும் சந்தர்ப்பவாதத்தையும் வாசகர்கள் புரிந்து கொள்ள உதவும் என்பதால், இக்கடிதத்தை வெளியிடுகிறோம்.

— *ஆசிரியர் குழு.*

**த**மிழர் கண்ணோட்ட பொங்கல் சிறப்பிதழ் மலர்க் குழு ஒருங்கிணைப்பாளர் பெ. மணியரசன் அவர்களுக்கு, வணக்கம். சில ஆண்டுகளுக்கு முன்பு, தாங்கள் பொதுச்செயலாளராக இருக்கும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, சென்னையில் நடத்திய தமிழ்நாட்டின் முதல் மெட்ரிகுலேசன் பள்ளி பத்மா சேசாத்திரியை இழுத்து மூடும் போராட்டத்தில் உங்களுடன் நானும் கலந்து கொண்டேன்.

தமிழ் மொழி காக்க நான் கலந்து கொண்ட இப்போராட்டம் எனக்கு மகிழ்ச்சி அளித்தது, அளிக்கிறது. ஆனால், இன்று தாங்கள் ஒருங்கிணைப்பாளராக இருந்து வெளிவந்துள்ள தமிழர் கண்ணோட்டம் மலரில் ஒரு மெட்ரிகுலேசன் பள்ளி விளம்பரம், எனக்கு அதிர்ச்சி அளிக்கிறது. நா புடைக்க தமிழ் மொழி குறித்து தமிழகம் எங்கும் பேசும் நீங்கள் ஒருங்கிணைப்பாளராக இருக்கும் மலரிலா அந்த விளம்பரம்!

உங்களுடன் அப்போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக வெட்கப்படுகிறேன். பகிர்வாக நண்பர்கள் கொடுத்த தொகை - விளம்பரம் என்றீர், சரி. பகிர்வாகத் தானே நண்பர்கள் கொடுத்தார்கள் பின், ஏன்? ஆங்கில விளம்பரம் என்ற நிர்பந்தத்திற்கு உட்பட்டீர். தொகைமுன் உங்கள் கொள்கை, கை நீட்டி நின்றதோ, நா எழ மறுத்ததோ? தமிழ்மொழி விளம்பரத்திற்காக எழுச்சி உரை ஆற்றியிருக்கலாமே, தமிழின் சிறப்பு மறந்து போனதோ? த.தே.பொ.க. கருத்து வேறு; தமிழ்த் தேசிய முன்னணி கருத்து வேறு என்றீர், சரி. த.தே.பொ.க. கருத்து வேறு, தமிழர் கண்ணோட்டம் கருத்து வேறு என்றீர், சரி. த.க. கருத்து வேறு த.க. மலர் கருத்து வேறு என்கிறீரே, தமிழக சந்தர்ப்பவாதிகளின் குரு நீரே!

மேற்கூறிய கட்சி, முன்னணி, இதழ் அனைத்திலும் உங்கள் பதவிக்கு மேல் பதவியே இல்லை. வார்த்தைகள்தான் வேறு, வேறு. முன்னால் பார்த்தால் இராவுத்தர் குதிரை; பின்னால் பார்த்தால் செட்டியார் குதிரை என்ற உங்கள் பொன்மொழிதான் நினைவுக்கு வருகிறது. சரி. அது எல்லாம் கிடக்கட்டும் தோழரே, உங்கள் கருத்தை நான் தெரிந்து கொள்ள என்ன செய்ய வேண்டும்?

*இவண்,*
இ.கரிகாலன்,
புகழேந்தி தெரு,
கிருஷ்ணாபுரம்,
மானோஜிபட்டி,
தஞ்சாவூர். 613 004.

வாழ்த்துகளுடன்
பேசி: 268789, 269545
அன்னி பெசன்ட் மெட்ரிகுலேசன் பள்ளி
சி எஸ் சாம்பசிவம் தெரு
&
அன்னி பெசன்ட் மழலையர் தொடக்கப்பள்ளி
சேதுராயர் தெரு, டோல்கேட்
சின்ன காஞ்சிபுரம்
கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பற்ற கல்விச் சேவை புரிந்து வரும் தலைசிறந்த கல்வி நிறுவனங்கள்.
தேர்ந்த ஆசிரியக்குழு - சிறந்த பாடப்பயிற்சி
தமிழ், ஆங்கிலம் இந்தி மொழிகள் போதனை கணினிப்பயிற்சி
மழலையர் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்புவரை


படிப்பகம்

www.padippakam.com

## நேபாளத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு:

# சூழ்ச்சி – சதிகளில் மேலாதிக்கவாதிகள் புரட்சிப் போரில் மாவோயிஸ்டுகள்

அண்டை நாடான நேபாளத்தில், கடந்த பிப்ரவரி முதல் நாளன்று, மன்னர் ஞானேந்திரா தனது அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம், பெயரளவுக்கு நீடித்து வந்த நாடாளுமன்ற ஆட்சிமுறையின் தலையைச் சீவி, உயிரைப் பறித்து சவக் குழிக்கு அனுப்பி விட்டார். ஏற்கெனவே, 2001-இல் அவசர நிலையை அறிவித்தும் 2002-இல் நாடாளுமன்றத்தைக் கலைத்தும் பிரதமர் தியோபா தலைமையிலான தற்காலிக பொறுப்பு அரசு தொடங்கி வைத்த சர்வாதிகார சதிராட்டத்தை இப்போது மன்னர் முழுவீச்சில் முழுமைப்படுத்தியுள்ளார். அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளை முடக்கியும், செய்தி ஊடகங்களின் குரல் வளையை நசுக்கியும், மக்களின் அனைத்து அடிப்படை உரிமைகளையும் ரத்து செய்தும், கால வரையின்றி அவசரநிலையை அறிவித்தும் இந்த ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் வானளாவிய அதிகாரத்துடன் கொக்கரிக்கிறார்.

பின்தங்கிய - வறுமை நிலையில் உள்ள ஏழை நாடான நேபாளத்தில், மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிராக 1990-இல் நடந்த ஜனநாயகத்துக்கான மக்கள் எழுச்சியைத் தொடர்ந்து பெயரளவிலான நாடாளுமன்ற ஆட்சிமுறை புகுத்தப்பட்டது. இருப்பினும் வரம்பற்ற அதிகாரம் மன்னரிடமே குவிக்கப் பட்டிருந்தது. ஓட்டுக் கட்சிகளின் பதவிச் சண்டை, கட்சித் தாவல், ஆட்சிக் கலைப்புகளால் கடந்த 14 ஆண்டுகளில் 14 முறை அரசாங்கங்கள் மாறும் அளவுக்கு நாடாளுமன்ற அராஜகம் தலைவிரித்தாடி, இப்போலி ஜனநாயக ஆட்சி முறையும் அம்பலப்பட்டுப் போயுள்ளது.

இந்நிலையில், மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கும் நாடாளுமன்ற போலி ஜன நாயகத்துக்கும் எதிராக விவசாயிகளை அணிதிரட்டி 1996-லிருந்து ஆயுதப் போராட்டப் பாதையில் முன்னேறிய மாவோயிஸ்டுகள் எனப்படும் கம்யூனிசப் புரட்சியாளர்கள், நேபாளத்தின் மேற்கு மாவட்டப் பகுதிகளில் மக்கள் அதிகாரத்தை நிறுவி விரிவடைந்தனர்.

அரச படைகளின் பயங்கரவாதத் தாக்குதலை முறியடித்து, கிராமப்புறங்களில் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தையும் தீண்டாமை உள்ளிட்ட சாதியக் கொடுமைகளையும் ஒழித்து தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையையும் பேராதரவையும் பெற்று மாவோயிஸ்டுகள் முன்னேறுகின்றனர். அவர்களது செல்வாக்குள்ள பகுதிகளிலிருந்து அரச படைகளும் நிர்வாகமும் பின்வாங்கி தப்பியோடுகின்றன. பீதியடைந்த ஆட்சியாளர்கள், அரச குடும்பத்தில் நடந்த அரண்மனைப் படுகொலைகளுக்குப் பின்னர் 2001-இல் 4 மாதங்களுக்குப் போர் நிறுத்தம் அறிவித்து மாவோயிஸ்டுகளுடன் மூன்று சுற்று பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

''மன்னராட்சி முறையை ஒழித்துக் கட்டு! மாவோயிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து கட்சிகள் - அமைப்புகளைக் கொண்ட இடைக்கால அரசை நிறுவு! அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி புதிய மக்களாட்சி முறையை அமை! இப்புதிய ஆட்சியின் மூலம் நிலச்சீர்திருத்தத்தையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டு!'' என்ற மையமான கோரிக்கையை மாவோயிஸ்டுகள் இப்பேச்சு வார்த்தைகளில் முன் வைத்தனர். இதை ஏற்க மறுத்த ஆட்சியாளர்கள், மாவோயிஸ்டுகளை பயங்கரவாதிகளைச் சித்தரித்து அரச படைகளைக் கொண்டு நரவேட்டையாடினர்.

கடந்த 19 ஆண்டுகளாகத் தொடரும் அரச பயங்கரவாதப் போரில் ஏறத்தாழ 11,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் மாவோயிஸ்டுகளும் கிராமப்புற விவசாயிகளும் ஏறத்தாழ 70 சதவீதத்தினர். கடந்த மூன்றாண்டுகளில் அரச படை சிப்பாய்களின் எண்ணிக்கை 45,000-லிருந்து 78,000 பேராக உயர்த்தப்பட்டு மூர்க்கமாகத் தாக்குதலை நடத்தி வருகிறது நேபாள அரசு. இந்தியப் பிற்போக்கு அரசோ, கோடிக்கணக்கில் இராணுவத் தளவாடங்களையும் தொழில்நுட்பச் சாதனங்களையும் கொடுத்து உதவியதோடு, இந்திய இராணுவத் தளபதி பத்பநாபனை நேபாளத்துக்கு அனுப்பி மாவோயிஸ்டுகளை வேட்டையாடுவதற்கான போர் உத்திகளை வகுத்துக் கொடுத்தது.

ஆனாலும், பயங்கரவாதிகளாக நேபாள ஆட்சியாளர்களால் சித்தரிக்கப்படும் மாவோயிஸ்டுகளை அரச பயங்கரவாதப் போரின் மூலம் துடைத்தொழிக்க முடியவில்லை. மறுபுறம், ஓட்டுக் கட்சிகள் அனைத்துமே மக்களிடம் செல்வாக்கிழந்து செல்லாக் காசுகளாகிவிட்டன. இக்கட்சிகளால் பெயரளவுக்கான நாடாளுமன்ற ஆட்சிமுறையை நிலைக்கச் செய்ய முடியாத அளவுக்கு நிலைகுலைந்து கிடக்கின்றன. தீவிரமாகிவிட்ட இந்த நெருக்கடியைச் சாதகமாக்கிக் கொண்டு, மாவோயிச பயங்கரவாதத்தை முறியடிப்

போலீசாரால் சுற்றி வளைக்கப்பட்ட பின்னும், அவசரகால ஆட்சியை எதிர்த்துப் போராடும் நேபாள மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்த போராளி.




படிப்பகம்

www.padippakam.com

பது என்ற பெயரால் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தி மீண்டும் வரம்பற்ற அதிகாரத்துடன் மன்னராட்சியினர் கொட்டமடிக்கின்றனர்.

நேற்றுவரை மக்கள் விரோத - ஜனநாயக விரோத நேபாள அரசுக்கு ஆயுத உதவி உள்ளிட்டு அனைத்தையும் செய்து முட்டுக் கொடுத்து ஆதரித்து வந்த இந்தியாவும், அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் மன்னரது ஆட்சிக் கவிழ்ப்புக்குக் கண்டனம் தெரிவித்து ஜனநாயக நாடகமாடுகின்றன. ஆயுத உதவியை நிறுத்தியும் புதிய மன்னராட்சியை அங்கீகரிக்க மறுத்தும் மீண்டும் பல கட்சி நாடாளுமன்ற ஆட்சியை நிறுவுமாறும் எச்சரிக்கின்றன.



அவசரகாலத் தணிக்கையின் காரணமாக, தினசரி செய்தித்தாள்கள், வெற்றுத் தாள்களாக வெளிவருவதைக் காட்டுகிறார், நேபாள தினசரி பத்திரிகையொன்றைச் சேர்ந்த ஆசிரியர்.

ஆனால், ''பயங்கர வாதத்தை ஒடுக்கும் பிரச்சினையில், உலக நாடுகள் இரட்டை நிலைபாடு எடுக்கக் கூடாது. ஈராக்கில் அமெரிக்காவும் காஷ்மீரில் இந்தியாவும் என்ன செய்கிறதோ, அதைத்தான் நேபாளத்திலும் செய்கிறோம்'' என்று ஆட்சிக் கவிழ்ப்புக்கு நியாயம் கற்பிக்கும் மன்னராட்சி கும்பல், தமது புதிய ஆட்சிக்கு சீனாவின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து பாகிஸ்தானும் வங்கதேசமும் மன்னராட்சியை அங்கீகரித்து விடுமோ, தனது பிராந்திய மேலாதிக்கத்துக்கு பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்ட நேபாளம் கைநழுவிப் போய்விடுமோ என்று இந்தியா பீதியடைந்துள்ளது. நேபாளம் உள்ளிட்ட தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் (சார்க்) கூட்டத்தில் பங்கேற்க இயலாது என்று அறிவித்து நிர்ப்பந்தம் கொடுக்கிறது.

ஆனால் மன்னராட்சியோ, இந்தியாவிலுள்ள தனது பாரம்பரிய கூட்டாளிகளான இந்துவெறி பார்ப்பன பாசிச சக்திகளைக் கொண்டும், நேபாள மேட்டுக்குடியினருடன் மணஉறவு கொண்டுள்ள இந்திய முன்னாள் அரச பரம்பரை - ஜமீன்தார் பரம்பரையின் வாரிசுகளைக் கொண்டும், நேபாளத்துடன் வர்த்தக உறவு வைத்துள்ள இந்தியப் பெருமுதலாளிகளைக் கொண்டும் இந்திய அரசுக்கு நிர்பந்தம் கொடுக்க முயற்சிக்கிறது.

அமெரிக்க வல்லரசோ, மேற்காசியாவைத் தொடர்ந்து தெற்காசியாவையும் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரவும், தனது போர்த்தந்திர நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளவும் நேபாளத்தை பகடைக் காயாகப் பயன்படுத்திக் கொள்ள எத்தணிக்கிறது. பயங்கரவாதத்தை ஒழிப்பது, ஜனநாயகத்தை மீட்பது என்ற பெயரில் அமெரிக்கா தனது படைகளை நேபாளத்தில் குவித்து ஆக்கிரமிக்கவும் வாய்ப்புள்ளது.

மேலாதிக்கவாதிகளின் எத்தணிப்புகள் எவ்வாறாயினும் கம்யூனிசப் புரட்சியாளர்களைப் புறக்கணித்துவிட்டு நேபாளத்தில் உண்மையான ஜனநாயகம் மலரவோ, மக்கள் வாழ்வில் வசந்தம் ஏற்படவோ ஒருக்காலும் சாத்தியமில்லை. அரச படைகளுக்கு எதிராக அளப்பரிய தியாகத்துடனும் வீரத்துடனும் போரிட்டு வரும் மாவோயிஸ்டுகள் உள்நாட்டில் மட்டுமின்றி அனைத்துலக அரங்கிலும் தமது புரட்சிகர போராட்டத்துக்கு பரந்து விரிந்த ஆதரவைத் திரட்ட வேண்டியது அவசியமாகியுள்ளது. மறுபுறம், நேபாள புரட்சியாளர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும், பிராந்திய வல்லரசான இந்தியாவையும் உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவையும் எதிர்த்து தெற்காசிய புரட்சிகர ஜனநாயக சக்திகளின் ஒன்றிணைந்த போராட்டமும் இன்று மிக அவசிய மாகியுள்ளது.

நேபாளத்தில் மன்னராட்சியைத் தூக்கியெறிந்து விட்டு புதிய ஜனநாயக அரசை அமைக்கப் போராடும் கம்யூனிசப் புரட்சியாளர்களின் செம்படைப் பிரிவு.



● பாலன்

www.padippakam.com

# "போராடாமல் வாழ்வில்லை!" - அறைகூவியது மாநாடு எதிரொலிக்கிறது போராட்டம்

சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்ட தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், இன்று சொந்த நாட்டில் அகதிகளாக்க் கைவிடப்பட்ட மீனவ மக்களின் துயரத்தைப் பிரதிபலிக்கின்றன. சுனாமி பேரழிவைத் தொடர்ந்து உடனடியாக நிவாரணப் பணிகளில் கடமையாற்றிய ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள், அதன் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட கடலோர மக்களின் நிரந்தர மறுவாழ்வுக்கான போராட்டப் பணிகளைத் தொடங்கினர்.

நிவாரணப் பணிகளில் அரசு காட்டி வரும் அலட்சியம், சோறு - துணி - கீற்றுக் கொட்டகையுடன் நிவாரணப் பணிகளை நிறுத்திக் கொண்ட வக்கிரம், கடலோர மக்களின் நிரந்தர மறுவாழ்வைப் புறக்கணித்து விட்டு, கடன் வலையில் சிக்க வைக்கும் நரித்தனம், கடற்கரைப் பகுதிகளிலிருந்து மீனவக் குப்பங்களை வெளியேற்றும் கொடுஞ்செயல், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிவாரண நாடகம் ஆகிய அனைத்தையும் விளக்கி கடலோர மாவட்டங்களில் கடந்த ஜனவரி மத்தியிலிருந்து விரிவான பிரச்சார இயக்கத்தைத் தோழர்கள் மேற்கொண்டனர்.

இப்புரட்சிகர அமைப்புகளின் சார்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், விவசாயிகள், உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் கடலோர மக்களின் வாழ்வுரிமைக்கான மாநாடு சென்னை, கடலூர், நாகை, நாகர்கோயில் ஆகிய இடங்களில் நடத்த தீர்மானிக்கப்பட்டு ''அன்று கொன்றது சுனாமி; நின்று கொல்கிறது அரசு'' - என்ற மைய முழக்கத்துடன் துண்டறிக்கைகள், சுவரொட்டிகள், சுவரெழுத்துகள், தட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாக வடக்கே சென்னை எண்ணூரிலிருந்து தெற்கே குமரி வரை பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. வீச்சான இப்பிரச்சாரத்தால் பீதியடைந்த அரசு, கடலோரப் பகுதிகளில் பொதுக் கூட்டங்கள் நடத்தத் தடைவிதித்தது. போலீசு - உளவுத் துறையின் அச்சுறுத்தல்கள், அ.தி.மு.க. காலிகளின் மிரட்டல்கள் ஆகியன தொடர்ந்த போதிலும், கடலோர மக்களின் உற்சாகமான ஆதரவுடன் பிரச்சார இயக்கம் தொடர்ந்தது.

பிப்ரவரி 3-ஆம் தேதியன்று குமரி மாவட்டத்தில் கோவளம் எனும் கடலோர கிராமத்தில் தெருமுனைக் கூட்டம் - வீதி நாடகம் எனத் தோழர்கள் பிரச்சாரம் செய்தபோது, மீனவர்களை அரசுக்கு எதிராகத் தூண்டிவிடுவதாகக் குற்றம் சாட்டி, தோழர்களைப் போலீசார் கைது செய்தனர். இதனைக் கண்ட ஒட்டு மொத்த கிராம மக்களும், ''எங்களுக்காக அக்கறையோடு பிரச்சாரம் செய்தவர்களைக் கைதுசெய்ய அனுமதிக்க மாட்டோம். உடனடியாக அவர்களை விடுதலை செய்! இல்லையேல், எங்களையும் கைது செய்!'' என்று போலீசு நிலையத்தை முற்றுகையிட்டனர். பீதியடைந்த போலீசு, உடனடியாகத் தோழர்களை விடுதலை செய்தது. மக்களின் பேராதரவுடன் தெருமுனைக் கூட்டங்களும் வீதி நாடகங்களும் தொடர்ந்தன.

சுனாமி அவலத்தின் நடுவே ஆதாயம் தேடக் கிளம்பிய இந்துவெறி ஆர்.எஸ்.எஸ். கும்பல், நாகை மாவட்டம் கீச்சாங்குப்பத்தில் வரிசையாக 20 கீற்றுக் கொட்டகைகளை நிறுவி, அதற்கு வியாசர்நகர் என்று பெயர் சூட்டி, தாங்கள் தத்தெடுத்துக் கொண்ட கிராமமாக அறிவித்துக் கொண்டது. கீச்சாங்குப்பத்தில் பிரச்சாரம் செய்த தோழர்களை, இங்கே பிரச்சாரம் செய்யக் கூடாது என்று எச்சரித்தது. இதையறிந்து அங்கு திரண்ட மீனவர்கள் இந்துவெறியர்களிடம் வாக்குவாதம் செய்தனர். நிசாந்தி என்ற +2 படிக்கும் மாணவி, ''யாரைக் கேட்டு எங்கள் குப்பத்தின் பெயரை மாற்றினீர்கள்? இது எங்கள் பூமி! நீங்கள் நிவாரண வேலை முடிந்ததும் போய் விடுவீர்கள். ஆனால் இவர்கள் எங்களோடு சேர்ந்து போராட வந்தவர்கள்; எங்கள் சொந்தக்காரர்கள். அவர்களைத் தடுக்க நீங்கள் யார்?'' என்று சரமாரியாக கேள்வி கேட்டு இந்துவெறியர்களின் வாலாட்டத்தை நிறுத்தினார். மக்களின் எதிர்ப்பைக் கண்டு ஆர்.எஸ்.எஸ். கும்பல் பம்மிக் கொண்டு பின்வாங்கியது.

நாகர்கோவிலில் நடந்த வாழ்வுரிமை மாநாட்டில் உரையாற்றும் தோழர் குருசாமி மயில்வாகனன்.



கடலூர் மாவட்டத்தில் சுனாமியால் பேரழிவுக்குள்ளான சுபஉப்பளவாடி என்ற கிராமத்துக்கு எந்த நிவாரண உதவியையும் அரசு செய்யவில்லை. மாவட்ட அதிகாரிகளுக்கு இப்படி ஒரு கிராமம் இருப்பதுகூட தெரியவில்லை. தோழர்களின் பிரச்சாரமும் பாதிக்கப்பட்ட மக்களோடு இணைந்து நடத்திய சாலை மறியல் போராட்டமும்தான் இப்படியொரு கிராமம் இருப்பதை அதிகார வர்க்கத்துக்கு உணர்த்தியது. அதன் பின்னரே பெயரளவுக்கு அரசின் நிவாரணப் பணிகள் நடந்தன.

மாநாடு என்றாலே, ஐயா அழைக்கிறார், அம்மா அழைக்கிறார் என்று பத்தடி நீள சுவரெழுத்துக்களை மட்டுமே பார்த்துப் பழக்கப்பட்ட அதிகாரிகளுக்கு, கடலோர மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வைக் கேட்கும், புரட்சியாளர்களின் சுவர் முழக்கம், சுவரொட்டிகள், துண்டறிக்கைகள் ஒவ்வொன்றும் பீதியையூட்டியது; உழைக்கும் மக்களுக்கோ நம்பிக்கையையூட்டியது. கடலோர மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறி சோர்வின்றி தொடர்ந்து செய்த பிரச்சாரத்தால் ஈர்க்கப்பட்ட பல்வேறு அறிவுத்துறையினரும் மாநாட்டில் பங்கேற்க முன்வந்தனர். பல்வேறு கிராமத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் தங்கள் கருத்துக்களை மாநாட்டில் பகிர்ந்து கொள்ள முன்வந்தனர். பாதிக்கப்பட்ட கடலோ



படிப்பகம்

www.padippakam.com




சென்னையில் நடந்த வாழ்வுரிமை மாநாட்டில் திருவொற்றியூர் பகுதியைச் சேர்ந்த என்.எஸ். மணி என்ற மீனவர் நிவாரணப் பணியின் மோசடிகளை அம்பலப்படுத்தி உரையாற்றுகிறார்.

ரப் பகுதி இளைஞர்களோ, மாநாட்டு வேலைகளில் கலந்து கொண்டு இரவு பகல் பாராமல் உழைத்தனர்.

மாநாட்டுப் பிரச்சாரம் மக்களின் பேராதரவுடன் முன்னேறுவதைக் கண்டு பீதியடைந்த போலீசு மாநாட்டை எப்படியும் நடத்தவிடாமல் தடுக்க முயற்சித்து இறுதியில் தோல்வியைக் கண்டது.

சுனாமி தாக்கப்பட்டவுடன் நிவாரண முகாம் அமைக்கும்போதே தடுக்கத் துவங்கிய குமரி மாவட்ட போலீசு அதிகாரிகள், மாநாட்டின் பேரணிக்கும் பொதுக் கூட்டத்திற்கும் இறுதிநாள் வரை அனுமதி கொடுக்கவில்லை. அதிகாரபூர்வமாக எழுதிக் கொடுத்தால் நீதிமன்றம் சென்று விடுவார்கள் என்பதை உணர்ந்த அதிகாரிகள் இன்று வா, நாளை வா என்று அலைக்கழித்தனர். இறுதியாக பேரணிக்கு தடைவிதித்து பொதுக் கூட்டத்திற்கு மட்டும்,பொதுக் கூட்டத் தினத்தன்று மாலை 5.30 மணியளவில் அனுமதி கொடுத்தனர். பொதுக் கூட்டம் முடிந்த சில நிமிடங்களில் பொய் வழக்கைப் போட்டு 8 தோழர்களை கைது செய்துள்ளனர்.

கடலூரில் பேரணி - பொதுக் கூட்டத்தை நடத்த இறுதிவரை போலீசார் அனுமதிக்கவேயில்லை. கடலூர் தோழர்களோ, மிகப் பெரிய திருமண மண்டபம் ஏற்பாடு செய்து மண்டபத்தின் உள்ளே மாநாட்டையும், மண்டபத்திற்கு வெளியே பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சியையும் நடத்தினர்

நாகையில் பேரணிக்கு அனுமதி மறுத்தது போலீசு. மாநாடு முடிந்த மறுநாளே அரசின் அலட்சியத்தை அம்பலப்படுத்தி எழுதப்பட்ட சுவரெழுத்துக்களை அழித்தது. சென்னையில், பேரணிக்கும் பொதுக் கூட்டத்திற்கும் அனுமதி கொடுத்துவிட்டு மாநாட்டு மண்டபத்தில் பகல் 11 மணிக்கு பேரணி தடை செய்யப்பட்டதாக போலீசார் அறிவித்தனர். மாநாட்டுக் கமிட்டித் தோழர்கள் போலீசு உயர் அதிகாரிகளைச் சந்தித்து, போராடி இறுதியில் பேரணிக்கு அனுமதி பெற்றனர். மாநாட்டில் பேசவந்த பேராசிரியர்களை மிகவும் நைச்சியமாகப் பேசி மிரட்டியுள்ளது போலீசு உளவுத்துறை. மீனவர்களுக்காக கண்ணீர் வடிப்பதாக கூறும் அரசு, அவர்களின் துயரக் குரல் கூட வெளியே வரக்கூடாது என்று எச்சரிக்கையாக இருந்ததையே மேற்கண்ட நடவடிக்கைகள் நிரூபித்துக் காட்டுகின்றன.

ஒரு சில தொண்டு நிறுவனங்கள் உதவிப் பொருட்கள் கொடுப்பதாகவும், அரசின் உதவி பெற டோக்கன் கொடுப்பதாகவும் கூறி மாநாடு நடக்கும் பகுதிகளில் பிரச்சாரம் செய்து, மாநாட்டில் வட்டார பகுதி கடலோர மக்களைக் கலந்து கொள்ள விடாமல் மறைமுகமாக தடை செய்தது அரசின் உளவுத்துறை.

நிவாரணப் பணத்தைக் கொள்ளையடித்த அதிகாரிகள், பங்கு போட்டுக் கொண்ட உள்ளூர் அரசியல் கட்சித் தலைவர்கள், மக்களுக்குக் கிடைத்த பொருட்களைச் சூறையாடிய ''தாதா''க்கள் போன்ற மக்கள் விரோத சக்திகளை தவிர, மற்றவர்கள் அனைவரும், புரட்சிகர அமைப்புகள் நடத்திய மாநாட்டிற்கு தம்மால் இயன்றவரை உதவிகள் செய்தனர்.

மக்களின் பேராதரவுடன் 5.2.05 அன்று நாகர்கோயிலிலும், 6.2,05 அன்று சென்னையிலும், 7.2.05 அன்று கடலூரிலும், 12.2.05 அன்று நாகப்பட்டினத்திலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், விவசாயிகள், உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் கடலோர மக்களின் வாழ்வுரிமைக்கான மாநாடு எழுச்சியுடன் நடைபெற்றது. சுனாமி பேரழிவால் பரிதவிக்கும் அவலத்தையும், அரசின் அலட்சியத்தையும், போராட வேண்டிய அவசியத்தையும் விளக்கும் வகையில் இம்மாநாடுகளில் வைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சி, பார்வையாளர்களுக்கு ஒருங்கிணைந்த கண்ணோட்டத்துடன் போராட்ட உணர்வூட்டுவதாக அமைந்தது.

அனைத்து மாநாடுகளிலும் சுனாமி

மறுவாழ்வுக்கு முழு மானிய உதவி கோரி மீனவர்கள், சென்னை - காமராசர் சாலையில் நடத்திய மறியல் போராட்டம். மாநாட்டின் வெற்றிக்கு இதுதான் நிரூபணம்.




படிப்பகம்

www.padippakam.com

பேரழிவுகளை நேரில் கண்டவர்களும், அதிலிருந்து மக்களை மீட்ட செயல் வீரர்களும், பேராசிரியர்களும், மீனவ சங்கத்தின் பிரதிநிதிகளும், வழக்குரை ஞர்களும், பாதிக்கப்பட்ட கடலோர மக்களின் பிரதிநிதிகளும், அரசின் அலட்சியத்தையும் நிரந்தர மறுவாழ் வுக்கான கோரிக்கைகளையும் விளக்கி உரையாற்றினர்.

அனைவரும் ஒரே குரலில், அரசின் அலட்சியமே பேரழிவிற்குக் காரணம் என்பதைப் பல கோணங்களில் விளக் கினர். மீனவர்களின் உண்மையான பிரச்சினையை அரசு உணர மறுக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தினர். வஞ்சக மாகக் கடலோர மக்களைக் கடற்கரைப் பகுதிகளில் இருந்தே விரட்டிவிட்டு, தங்களின் எஜமானர்களான பன் னாட்டு மீன்பிடி கம்பெனிகளுக்கும் உல்லாச விடுதிகளின் சொந்தக்காரர்க ளுக்கும் விரைவில் ஏலம் போட்டு விற்க முயற்சிக்கும் அரசின் சதியை அம்பலப்படுத்திக் காட்டினர்.

இம்மாநாடுகளில் ம.க.இ.க. மையக் கலைக்குழுவினர் நடத்திய "கொலையாளி" எனும் அரசிடம் நியா யம் கேட்பதாக அமைந்த நாடகம் பார் வையாளர்களிடம் கண்ணீரை வர வழைத்து அரசின் அலட்சியத்தை அம் பலப்படுத்திக் காட்டியது; அதன் புரட் சிகர கலை நிகழ்ச்சிகள் மக்களிடம் போராட்ட உணர்வூட்டியது.

நான்கு இடங்களிலும் நடந்த இம் மாநாடுகளின் இறுதியில், இப்பேரழிவு களுக்குப் பின்னரும் அரசு காட்டி வரும் அலட்சியத்தை அம்பலப்படுத் தியும், கடலோர மக்களின் நிரந்தர மறு வாழ்வுக்கான கோரிக்கைகளை முன் வைத்தும் 13 தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன. "இரக்கமற்ற இந்த அரசிட மும் ஆளும் வர்க்கங்களிடமும் கரு ணை காட்டுமாறு கெஞ்சிப் பய னில்லை. நமது வாழ்வுரிமையை நிலைநாட்டிக் கொள்ள நாம் போராட வேண்டும்" என எல்லா தரப்பு உழைக் கும் மக்களையும் இம்மாநாடுகள் அறைகூவி அழைத்தன.

இந்த அறைகூவலை அடுத்த சில நாட்களிலேயே கடலோர மக்கள் எதி ரொலித்து போராடத் தொடங்கிவிட்ட னர். இது இம்மாநாட்டிற்குக் கிடைத்த வெற்றி. இன்று தன்னெழுச்சியாகப் போராடத் தொடங்கிவிட்ட மக்கள் நாளை புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் திரண்டு போராடும் போது, அது சுனாமியை விட சீற்றத் துடன் எழும் என்பது உறுதி.

— பு.ஜ. செய்தியாளர்கள்

# அமெரிக்கா ஏகாதிபத்தியம் காகிதப் புலிதான்

## வெனிசுலா மக்களின் போராட்ட அனுபவங்கள்

"பயங்கரவாதத்தை அரசு பயங்க ரவாதத்தால் ஒழித்துவிட முடியாது. ஈராக்கின் ஃபலூஜா மற்றும் பிற நகரங் களின் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி அப்பாவிக் குழந்தைகளைக் கொன்றொழித்த அமெரிக்க மேலாதிக் கவாதிகள்தான், உலகின் மிகக் கொடிய பயங்கரவாதிகள்!" - இப்படி வெளிப் படையாக அமெரிக்க ஏகாதிபத்திய வாசலிலேயே இடியென முழங்குகி றார், வெனிசுலா நாட்டின் அதிபரான ஹியூகோ சாவெஸ்.

நம் நாட்டு ஓட்டுப் பொறுக்கி அரசி யல்வாதிகளைப் போல் வெனிசுலா அதிபர் அமெரிக்காவுக்கு எதிராக வீர வசனம் பேசி வெற்றுச் சவடால் அடிக்க வில்லை. அமெரிக்கா திணித்துவரும் தனியார்மய - தாராளமயக் கொள்கை களை எதிர்த்து நிற்பதோடு, மனிதநேய மிக்க மாற்றுப் பொருளாதாரத் திட்டத் தையும் முன் வைத்து தனது நாட்டில் அவர் செயல்படுத்த விழைகிறார். அமெரிக்காவின் அரசியல் - பொருளா தாரத் தலையீடுகளுக்கு எதிராகப் போராடுவதுதான் ஏழை நாடுகளின் தற்காப்புக்கான ஒரேவழி என்று கூறும் அவர், வெனிசுலாவின் தேசிய வருமா னத்தில் பெரும்பகுதியை ஒடுக்கப் பட்ட மக்களின் மருத்துவம், உணவு, கல்வி முதலான சமூக நலத்திட்டங்க ளுக்கு ஒதுக்கி ஏழைகளின் அன்புக்கு ரிய தலைவராக உயர்ந்து நிற்கிறார்.

கடந்த டிசம்பர் 6-ஆம் நாளன்று வெனிசுலா தலைநகர் காரகாசில் "மானிட இனத்தைக் காப்பதற்கான அனைத்துலக அறிவுஜீவிகள் - கலை ஞர்களின் மன்றம்" என்ற அமைப்பின் சார்பில் நடந்த விழாவில், புதிதாகப் பள்ளியில் சேர்ந்து எழுதப் படிக்கத் தேறியவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர் களுக்குமான பாராட்டு விழாவும் இடம் பெற்றது. வெனிசுலாவில் புதிதா கத் திறக்கப்பட்டுள்ள அரசுப் பள்ளிக ளில் சேர்ந்து படிக்க வயது வரம்பு கிடையாது. 50-லிருந்து 70 வயது டைய பெரியவர்களும் தாய்மார்களும் இப்பள்ளிகளில் கற்றுத் தேறி, கைகளில் புத்தகங்களை ஏந்தி, "எங்க ளுக்கு இப்போது எழுதப் படிக்கத் தெரி யும்" என்று அந்த விழாவில் மகிழ்ச்சி யோடு முழங்கினார்கள். அவர்கள் முன் எழுந்து நின்ற அதிபர் சாவெஸ், "ஏகாதிபத்தியம் இவர்களது கல்விக் கண்ணைக் குத்தி குருடாக்கித் தற்குறி களாக்கியது; இன்று மக்களாட்சி, அவர் களது அறிவுக் கண்ணைத் திறந்துள்ள தைக் காணுங்கள்!" என்று முழங்கிய போது, பெருந்திரளாக இவ்விழாவில் பங்கேற்ற உழைக்கும் மக்கள் பெருத்த ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

முதியோர் கல்வித் திட்டம் மட்டு மல்ல; குழந்தைகளுக்கு இருவேளை உணவுடன் கல்வி அளிக்கும் திட்டமும் அவரது ஆட்சியில் தீவிரமாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. சாவெஸ் பத விக்கு வருவதற்கு முன்பு வரை வெனி சுலாவில் ஏழை மக்களுக்கு மருத்துவ உதவி என்பது எட்டாக் கனியாகவே இருந்தது. அரசு மருத்துவமனைகளில் மருந்துகளே இருக்காது. தனியார் மருத்துவமனைகளில்தான் சிகிச்சை பெற முடியும். அங்கு நிலவும் கட்ட ணக் கொள்ளையில் சிக்கிச் சாவதை விட நோயினாலேயே செத்து விடலாம் என்று ஏழைகள் வேதனையுடன் குறிப் பிடுமளவுக்கு நிலைமை இருந்தது. இப் போது அதிபர் சாவெஸ் பதவிக்கு வந்த பின், தனது நாட்டிலிருந்து கியூபாவுக்கு பெட்ரோலிய எண்ணெயை ஏற்றுமதி செய்து, அதற்கீடாக கியூபா நாட்டு மருத்துவர்களை தனது நாட்டில் பணி செய்ய அழைத்துள்ளார். இவர்கள் வெனிசுலாவின் சேரிப் பகுதிகளில் மருத்துவசேவை செய்கின்றனர். மருந் துகளும் சிகிச்சையும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

இதுதவிர துப்புரவு, குடிநீர் வழங்கு தல் ஆகிய பணிகளை அரசாங்கம் முறையாகச் செய்து வருகிறது. சேரிப் பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் விளையாட்டு - உடற்பயிற்சிகள் அளிக்கப்படுகின் றன. அனைத்து ஏழைகளுக்கும் மானிய விலையில் உணவுப் பொருட்

www.padippakam.com

களை அரசே முறையாக விநியோகித்து வருகிறது. தனியார் எஸ்டேட்டுகளின் பயிரிடப்படாத நிலங்களையும், புறம்போக்கு நிலங்களையும் நிலமற்ற கூலி - ஏழை விவசாயிகளுக்கு சாவெஸ் அரசு பகிர்ந்தளித்து வருகிறது. இது தவிர, விவசாயக் கூட்டுறவுகளையும் உருவாக்கி உதவுகிறது. இதற்குமுன் உணவுப் பொருட்களை பெருமளவில் இறக்குமதி செய்துவந்த அந்நாடு, இப்போது சுயசார்பான விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

இந்நடவடிக்கைகளும் மக்கள் நலத் திட்டங்களும் சாவெஸ் என்ற தனிமனிதனின் சிந்தனையில் உருவான மனிதநேயக் கொள்கைகளாக குறுக்கிச் சுருக்கிப் பார்க்க முடியாது. இவை கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக தனியார்மய - தாராளமயக் கொள்கைகளுக்கு எதிராகப் போராடி வரும் வெனிசுலா உழைக்கும் மக்களது உணர்வின் பிரதிபலிப்பு!

வெனிசுலா - தென்னமெரிக்கக் கண்டத்தின் தலைவாசலில் உள்ள நாடு. உலகின் பெட்ரோலிய ஏற்றுமதியில் 3-வது இடத்தை வகிக்கும் நாடு. நாளொன்றுக்கு 26 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் உற்பத்தியாகும் நாடு. ஆனாலும் ஏழைகளும் பஞ்சைப் பராரிகளும் நிறைந்த நாடு. மொத்த மக்கட் தொகையில் 80 சதவீத மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்க, 20 சதவீத தரகு முதலாளித்துவ மேட்டுக் குடியினரும் அதிகார வர்க்கத்தினரும் மட்டுமே ஆடம்பர சுகபோகங்களில் மூழ்கித் திளைத்தனர்.

1980-களில் உலக வங்கியும் ஐ.எம்.எஃப்-உம் திணித்த கட்டுமான சீர்திருத்தங்கள், அந்நாட்டை திவாலாக்கியது. அதன்பின்னர் தீவிரப்படுத்தப்பட்ட தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் அந்நாட்டையும் மக்களையும் சூறையாடி ஓட்டாண்டிகளாக்கியது. வேலையிழந்து வாழ்விழந்த மக்கள் நாடோடிகளாக நகரங்களை நோக்கி ஓடினர். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் வறுமையும் தீவிரமாகியது. விலைவாசி விண்ணை முட்டியது. மானியங்கள் வெட்டப்பட்டு ரேஷன் கடைகள் மூடப்பட்டன. கல்வி, மருத்துவம், குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அனைத்தும் மக்களுக்குப் புறக்கணிக்கப்பட்டு தனியார்மயமாக்கப்பட்டன.



அமெரிக்காவின்மேலாதிக்கம், தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை எதிர்த்துப் போராடிவரும் வெனிசுலா அதிபர் ஹியூகோ சாவெஸ்.

வாழ்விழந்த மக்கள் இத்தனியார்மய - தாராளமயத் தாக்குதல்களுக்கு எதிராக தன்னெழுச்சியாகத் திரண்டு போராடினர். கடந்த பத்தாண்டுகளில் ஏதுமற்ற மக்கள் நகர்ப்புற சூப்பர் மார்க்கெட்டுகளைச் சூறையாடுவது பல முறை நடந்தது. துறைமுகங்களில் இறக்குமதியாகும் உணவுப் பொருட்களைப் பட்டினிப் பட்டாளம் பறித்தெடுப்பதும் தொடர்ந்தது. அன்றைய அமெரிக்கக் கைக்கூலி அதிபர் கார்லோசின் அரசு, நாடெங்கும் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தி, இராணுவத்தை ஏவி இப்போராட்டங்களை ஒடுக்கி, பல்லாயிரக்கணக்கானோரைக் கொன்றொழித்து பாசிச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

இந்தச் சூழ்நிலையில், அதிபர் தேர்தல் வந்தது. அமெரிக்கக் கைக்கூலியான பாசிச அதிபர் கார்லோசை எதிர்த்து, வெனிசுலா இராணுவத்தில் படை அதிகாரியாகப் பணியாற்றிய ஹியூகோ சாவெஸ் போட்டியிட்டார். ஆளும் கட்சியும் எதிர்க் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு தனியார்மய - தாராளமயக் கொள்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தி வந்த சூழலில், சாவெஸ் இவற்றை எதிர்த்து மக்கள் நலக் கொள்கைகளை முன்வைத்துப் பிரச்சாரம் செய்தார். ஓட்டுக் கட்சிகளின் ஊழல் - ஒடுக்குமுறை ஆட்சிகளால் வெறுப்புற்றிருந்த உழைக்கும் மக்கள், தமது உணர்வுகளைப் பிரதிபலித்த சாவெசை ஆதரித்து 2000-ஆம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தலில் அவருக்கு ஏறத்தாழ 56% வாக்களித்து வெற்றி பெறச் செய்தனர்.

சாவெஸ், அதிபர் பதவிக்கு வந்ததும் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பை (OPEC) வலுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். ஈராக் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை எதிர்த்ததோடு அப்போதைய ஈராக் அதிபரான சதாம் உசேனையும் சந்தித்துப் பேசினார். ஆப்கான் மீதான ஆக்கிரமிப்பு போரை வெளிப்படையாக எதிர்த்தார். அமெரிக்க எதிர்ப்பாளரான கியூபா அதிபர் காஸ்ட்ரோவை தனது ஆசான் என்று போற்றி ஆதரித்த அவர், பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ள கியூபாவுக்குச் சலுகை விலையில் பெட்ரோலிய எண்ணெய் கொடுத்து உதவினார்.

இது மட்டுமின்றி, எண்ணெய் வருவாயை விழுங்கி ஏப்பம் விட்டு வந்த ஏகாதிபத்திய - தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் தமது வருவாயில் குறிப்பிட்ட ஒரு பங்கை மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்குக் கட்டாயம் ஒதுக்க வேண்டும் என்று சட்டமியற்றினார். ஏகாதிபத்திய எண்ணெய் நிறுவனங்கள் வெனிசுலாவுக்குச் செலுத்த வேண்டிய "ராயல்டி" கட்டணத்தையும் தீர்வைகளையும் உயர்த்தினார். அன்னிய கூட்டுப் பங்கு நிறுவனங்களின் முதலீடுகளுக்குக் கட்டுப்பாடுகள்

வெனிசுலாவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புத் தேர்தலில், சாவெஸ் 60% வாக்குகளைப் பெற்று வென்றதைக் கொண்டாடும் அவரது ஆதரவாளர்கள்.



www.padippakam.com

விதித்தார். நிலச்சீர்திருத்தத்தை உடன டியாகச் செயல்படுத்த ஆணையிட் டார்.

இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டு ஆத்திரமடைந்த பன்னாட்டு எண்ணெய் ஏகபோக நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் நிலப்பிர புக்களும் அதிபர் சாவெசைப் பதவியி லிருந்து தூக்கியெறிய கூட்டுச் சதியில் இறங்கி கலகங்களைத் தூண்டி விட்ட னர். பத்திரிகை முதலாளிகள் சாவெ சுக்கு எதிரான அவதூறுப் பிரச்சாரத் தைக் கட்டவிழ்த்து விட்டனர். ஊழல் அதிகாரிகள் அதிபரின் உத்தரவுகளைச் செயல்படுத்த மறுத்து முட்டுக் கட்டை போட்டனர். 2002-ஆம் ஆண்டு ஏப் ரல் 12-ஆம் தேதியன்று அமெரிக்கா வின் ஆசியுடன் திடீர் இராணுவ ஆட் சிக் கவிழ்ப்பு நடத் தப்பட்டு, அதிபர் பதவியிலிருந்து தூக்கியெறியப் பட்டு சாவெஸ் சிறையிடப்பட் டார். அமெரிக்க உளவு நிறுவன மான சி.ஐ.ஏ. திட்ட மிட்டுக் கொடுத்த இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு, ''ஜன நாயகத்துக்கான தேசிய அறக்கட் டளை'' என்ற அமெரிக்க அரசின் துணை அமைப்பு கோடிக்கணக்கான டாலர்களை வாரியி றைத்தது. அமெரிக் கக் கைக்கூலியான எண்ணெய் நிறு வன முதலாளி புதிய அதிபராக்கப் பட்டார்.

ஆனால், ஏகாதி பத்தியவாதிகளின் மகிழ்ச்சியும் ஆர வாரமும் இருநாட்கள் கூட நீடிக்க வில்லை. அதிபர் சாவெசை ஆதரித்து நகர்ப்பற ஏழைகளும் கிராமப்புற விவ சாயிகளும் நாடெங்கும் போராடத் தொடங்கினர். சாவெசை ஆதரித்து இராணுவமே பிளவுபட்டது. வெனிசு லாவில் பெருகிய அதிருப்தி - கலகத் தாலும், அமெரிக்காவையும் அதன் எடுபிடி கொலம்பியாவையும் தவிர, இதர தென்னமெரிக்கக் கண்டத்து நாடு கள் எவையும் இச்சட்டவிரோத ஆட் சிக் கவிழ்ப்பை ஆதரிக்காததாலும் அம்பலப்பட்டுத் தனிமைப்பட்டு போன நிலையில், இத்திடீர் ஆட்சிக் கவிழ்ப்பு 28 மணி நேரத்தில் படுதோல் வியடைந்தது. சாவெஸ் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் அதிபராகப் பொறுப்பேற்றார். அமெரிக்க வல்லர சின் முகத்தில் கரிபூசப்பட்டது.

சாவெஸ் ஏற்கனவே அதிபராக இருந்தபோது உருவாக்கப்பட்ட புதிய அரசியல் சட்டப்படி, மக்கள் தமது பிர திநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், திருப் பியழைக்க கருத்துக் கணிப்பு தேர்தல் நடத்தவும் உரிமையளிக்கப்பட் டுள்ளது. இதன்படி கடந்த ஆண்டு ஆகஸ்டில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புத் தேர்தலில் ஏறத்தாழ 60% வாக்குகள் பெற்று அதிபர் சாவெஸ் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். கடந்த ஆண்டு அக்டோபரில் நடந்த மாநில ஆளுநர் தேர்லில் சாவெஸ் ஆதர வாளர்கள் ஆகப்பெரும்பான்மையான மாநிலங்களில் வெற்றி பெற்றுள்ளனர். இது தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு கிடைத்த தேர்தல் வெற்றி மட்டுமல்ல; தாராளமயத் தாக்குதலுக்கும் அமெ ரிக்க மேலாதிக்கத்துக்கும் எதிராகப் போராடிவரும் வெனிசுலா உழைக்கும் மக்களுக்குக் கிடைத்த வெற்றி.

இந்த வெற்றிகளையும் போராட் டங்களையும் ''பொலிவாரிய புரட்சிகர இயக்கம்'' என்று சாவெஸ் பெருமிதத் துடன் குறிப்பிடுகிறார். (சைமன் பொலிவார் என்பவர் தென்னமெரிக் கக் கண்டத்து புரட்சியின் நாயகனாகப் போற்றப்படுகிறார். அவரது பெய ராலே இப்போராட்டப் பாதையை பொலிவாரியப் புரட்சி என்று குறிப்பி டுகின்றனர்). மக்களை, தாங்களாகவே அமைப்பாக்கிக் கொண்டு போராடு மாறு சாவெஸ் அறை கூவி அழைக்கி றார். தென்னமெரிக்கக் கண்டத்தை அடிமையாக்கி மேலாதிக்கம் செய்ய முயற்சிக்கும் அமெரிக்காவின் சுதந்திர வர்த்தகப் பிராந்தியத் திட்டத்துக்கு மாற்றாக, பொலிவாரிய மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தை முன் வைத்து மத்திய அமெரிக்க - தென்ன மெரிக்க நாடுகளை ஐக்கியப்படுமாறு கோருகிறார். அமெரிக்கா தலைமையி லான உலகமயமாக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கான அலுவல் வலைப் பின்னல் மையத்தை வெனிசுலா தலை நகரில் நிறுவவும் தீர்மானித்துள்ளார். ''எமது புரட்சியா னது, அமைதி வழி யிலானது, அதேசம யம் மக்கள் படை யைக் கொண்டு ஆயுத ரீதியிலா னது'' என்று விளக் குகிறார் அதிபர் சாவெஸ்.

அதிபர் சாவெஸ், தனது வரம்புக்குட் பட்ட அதிகாரத் தைக் கொண்டு சட் டங்கள் - விதிகள் - கட்டுப்பாடுகளை மேலிருந்து நிறை வேற்றுவதன் மூலம் அமெரிக்க மேலாதிக்கத்தை எதிர்த்து நின்று வெனிசுலாவின் சுயாதிபத்திய உரி மையைத் தற்காத் துக் கொண்டு, மக் கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறை வேற்ற முடியும் என்று நம்புகிறார். அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பு, சுய சார்பு, மக்களின் நல்வாழ்வு, ஒடுக்கப் பட்ட நாடுகள் - மக்களுடன் ஒருமைப் பாடு - முதலான உயர்ந்த நோக்கங்க ளைக் கொண்டிருந்தாலும் இதைச் சாதிக்க அவர் மேற்கொண்டுள்ள பாதை சட்டவாத-தாராளவாத முதலா ளித்துவ ஜனநாயக ஆட்சிப் பாதையே யாகும்.



சாவெஸ் கொண்டு வந்துள்ள கல்வித் திட்டத்தின் கீழ் எழுத்தறிவு பெற்ற முதியோர்கள்.

வர்க்கச் சுரண்டலும் ஆதிக்கமும் நிலவும் அதேநேரத்தில், உழைக்கும் மக்களின் அதிருப்திக்கும் போராட்டங் களுக்கும் வடிகாலாக, மக்கள் நல்வாழ்

www.padippakam.com

வுக்கான சில திட்டங்களைப் பெயரளவுக்குச் செயல்படுத்துவதை இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலங்களில் ஏகாதிபத்திய உலகம் பின்பற்றியது. இதனை ''சேமநல அரசு'' (welfare state) என்று ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகள் குறிப்பிடுகின்றனர். தனியார்மய - தாராளமயத் தாக்குதலைத் தொடர்ந்து இத்தகைய பெயரளவுக்கான கவர்ச்சிவாதத் திட்டங்களும் கொள்கைகளும் கை கழுவப்பட்டு விட்டன. அதிபர் சாவெஸ், முந்தைய ''சேமநல அரசுகள்'' பின்பற்றிய கொள்கைகளையே தனது வரம்புக்குட்பட்ட அதிகாரத்தைக் கொண்டு இப்போது செயல்படுத்தி வருகிறார். இருப்பினும், அதிபர் சாவெஸ் இதை ''பொலிவாரிய புரட்சி'' என்று குறிப்பிடுவதை வைத்து, வெனிசுலாவில் புரட்சி முன்னேறுவதாகவும், புரட்சிகரமான அரசு நிறுவப்பட்டுள்ளது போலவும் இங்குள்ள இடது - வலது போலி கம்யூனிஸ்டுகளும் குட்டி முதலாளித்துவ அறிவுத்துறையினரும் சிலாகித்து எழுதி வருகின்றனர். அதன் மூலம் அமைதியான - சமாதான வழிகளிலேயே அதிகாரத்தைக் கைப்பற்றி விட முடியும்; புரட்சியைச் சாதித்துவிட முடியும் என்கிற பிரமைகளை வளர்த்து, கேடுகெட்ட தமது ஓட்டுச் சீட்டுப் பாதைக்கு முட்டுக் கொடுக்க முயற்சிக்கின்றனர்.

அதிபர் சாவெஸ் மேற்கொண்டுள்ள இச்சீர்திருத்தவாதப் பாதையானது, ஏற்கெனவே தென்னமெரிக்க நாடான சிலியில் கால் நூற்றாண்டுக்கு முன்னரே படுதோல்வியடைந்து இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட பாதையாகும். சிலி நாட்டில் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த போலி சோசலிஸ்டுகள் மற்றும் போலி கம்யூனிஸ்டுகள், தரகுப் பெருமுதலாளிகளுக்கு எதிராகச் சட்டங்களைப் போட்டு, மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்த முற்பட்டதும், அமெரிக்கா அந்நாட்டில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தி போலி கம்யூனிஸ்டுகளைச் சுட்டுக் கொன்று நரவேட்டையாடி தனது விசுவாச இராணுவ சர்வாதிகாரியைப் பதவியில் அமர்த்தியது. சிலி நாட்டிலாவது ஒரு போலி கம்யூனிச கட்சி இருந்தது. ஆனால் வெனிசுலாவில், அதிபர் சாவெசுக்கு அப்படியொரு கட்சி கூட இல்லை. அவரால் உருவாக்கப்பட்டுள்ள ''ஐந்தாவது குடியரசு இயக்கம்'' என்ற கட்சியானது ஆரம்ப நிலையில் தான் உள்ளது. அதுவும் சந்தர்ப்பவாத - சட்டவாத சக்திகளைக் கொண்டதாகவே உள்ளது. மறுபுறம், அவர் முன்னாளில் இராணுவ அதிகாரியாக இருந்ததால், இராணுவத்தில் ஒரு பெரும் பகுதி அவருக்கு ஆதரவாக உள்ளது.



சாவெஸ் ஆட்சி கவிழ்ப்பு பற்றிய விசாரணையை முடக்குவதற்காக, கார் குண்டு வைத்துக் கொல்லப்பட்ட அவ்வழக்கு விசாரணை நீதிபதி டானிலோ ஆண்டர்சன்.

அதிபர் சாவெஸ் தேர்தல் மூலம் பதவிக்கு வந்துள்ளாரே தவிர, அந்நாட்டின் ஆளும் வர்க்கங்களான தரகுப் பெருமுதலாளிகளும், நிலப்பிரபுக்களும் வீழ்த்தப்படவில்லை. அவர்களின் சொத்துக்கள் நட்டஈடின்றி பறிமுதல் செய்யப்படவில்லை. இந்த ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்யும் வகையில் பாசிச முறையில் கட்டியமைக்கப்பட்டுள்ள அரசு எந்திரம் - அதிகார வர்க்கம், போலீசு, இராணுவம், நீதித்துறை, சிறைச்சாலை அடங்கிய ஒட்டுமொத்த அரசு எந்திரம் தூக்கியெறியப்பட்டு புரட்சிகர வர்க்கங்கள் தமது அதிகாரத்தை நிறுவவுமில்லை.

மக்கள் போராட்டங்களால் தற்காலிகமாக ஆளும் வர்க்கங்கள் பின்வாங்கிக் கொண்டுள்ளதே தவிர, அதன் பொருளாதார பலமும் ஆதிக்கமும் வீழ்த்தப்படவில்லை. தேசிய வருமானத்தில் பெரும் பகுதியை ஈட்டித் தரும் அரசு பெட்ரோலியத் துறையை, நிர்வகித்துக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டதாகவே மேட்டுக்குடி கும்பல் இன்னும் நீடிக்கிறது. நாடாளுமன்றம், நீதித்துறை, மாநில அரசுகளின் நிர்வாகம் முதலானவற்றில் எதிர்த்தரப்பு பலமிக்கதாகவே உள்ளது. அண்மையில் சாவெசை ஆதரித்த நீதிபதி ஆளும் வர்க்கக் கூலிப் படையினரால் குண்டு வீசிக் கொல்லப்பட்டுள்ளார். பத்திரிகை - ஊடகத் துறையில் சாவெஸ் எதிர்ப்பு தரகு முதலாளிகளே ஏகபோகமாக உள்ளனர். வானொலி மட்டுமே சாவெஸ் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. பெரும்பான்மை உயர் இராணுவ அதிகாரிகளும், அதிகார வர்க்கமும் சாவெஸ் எதிர்ப்பாளர்களாகவே உள்ளனர். ''எனது கொள்கைகளைச் செயல்படுத்த முடியாமல் பெரும் முட்டுக் கட்டையாக இருப்பது அதிகார வர்க்கம்தான்'' என்று சாவெஸ் வெளிப்படையாக குற்றம் சாட்டுகிறார். அமைப்பாக்கப்படாத கூலித் தொழிலாளர்கள் சாவெஸ் அரசை ஆதரிக்கும் அதேசமயம், அமைப்பு ரீதியிலான மேட்டுக்குடி தொழிலாளர்கள் அரசியல் உணர்வின்றி, ஆளும் வர்க்கங்களுக்கு விலைபோகுமளவுக்கு பிழைப்புவாதத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். ஆளும் வர்க்கச் சதிகளுக்கு இரையாகி, ஈராண்டுகளுக்கு முன்பு சாவெஸ் அரசுக்கு எதிராக தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். கிராமப்புற விவசாயிகளும் நகர்ப்புற ஏழைகளும் சாவெசுக்கு ஆதரவாக உள்ள போதிலும், அவர்கள் புரட்சிகர - வர்க்கப் போராட்ட அமைப்புகளில் திரட்டப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில்தான் அதிபர் சாவெஸ் வரம்புக்குட்பட்ட தனது அதிகாரத்தைக் கொண்டு சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அவரது சீர்திருத்தங்கள் வெற்றி பெறவும், அந்த வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் வெனிசுலா உழைக்கும் மக்கள் புரட்சிகர அமைப்புகளில் திரண்டு கீழிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றும் புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபட வேண்டியது, உடனடி அவசியமாக உள்ளது.

மக்கள் நலன், சுயசார்பு, அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பு எனும் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டுள்ள அதிபர் சாவெசின் வரம்புக்குட்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளை வரவேற்று ஆதரிப்பதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயகப்பூர்வமான சாவெசின் ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்க மேற்கொண்டு வரும் சதிகளையும் - சூழ்ச்சிகளையும் அம்பலப்படுத்தி முறியடிப்பதும் உலகெங்குமுள்ள புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் கடமையாகும். அதேசமயம், அதிபர் சாவெசின் மக்கள் நலக் கொள்கைகளையே மாபெரும் புரட்சியாகச் சித்தரித்து மாய்மாலம் செய்துவரும் போலி கம்யூனிஸ்டுகளின் பித்தலாட்டத்தை முறியடிப்பது, அதைவிட முக்கியமான கடமையாகும்.

• மனோகரன்

www.padippakam.com

# திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளின் பிடியில் ராஜகம்பீரம்

பொறுக்கி அரசியலுடன் கலந்த கிரிமினல் அரசியலானது, தமிழகத்தில் திடீர் பணக்கார அரசியல் ரவுடித்தனமாக வேர்விட்டுப் பரவி மக்களை அச்சுறுத்தி வருகிறது. சிவகங்கை மாவட்டம், மானாமதுரைக்கு அருகில் ராஜகம்பீரம் என்ற ஊரில், ஊராட்சி மன்றத் தலைவரான சேக் முகமது அடித்துவரும் கொட்டமும் ரவுடித்தனங்களுமே இந்த உண்மையை நிரூபித்துக் காட்டுகின்றன.

ராஜகம்பீரத்தில் ஊராட்சி மன்றத் தலைவராக இருப்பவர் சேக் முகமது. மாநில ஊ.ம. தலைவர்கள் கூட்டமைப்பின் செயலராகவும் இருக்கிறார். தி.மு.க.வைச் சேர்ந்த இவர், முன்னாள் ஜமாத் தலைவராவார். இவரது விசுவாசக் கூட்டாளியாக இருப்பவர் ஜலால். இவர் இப்போதைய ஜமாத் தலைவர். ஊர் தாலியறுத்து - ஊரை வளைத்து உலையில் போட்டு வருவதில் இவர்கள் 'இரு வல்லவர்கள்'.

ராஜகம்பீரத்தைச் சேர்ந்த முகமது இஸ்மாயில் பூர்வீகச் சொத்துக்களுடன் வசதியாக வாழ்ந்தவர். இவர் இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் பல லட்ச ரூபாய் மதிப்புள்ள மாடி வீடொன்றை 1998-இல் கட்டினார். இவரது மகன் சேக் முகமது, நகைக்கடை நிறுவும் நோக்கத்துடன் சென்னையிலுள்ள பானு ஜூவெல்லர்ஸ் கடையில் தொழில் கற்றுக் கொள்ள வேலை செய்து வந்தார். அவர் தனது கடையில் திருடிவிட்டதாகப் பொய்க் குற்றம் சாட்டிய பானு ஜூவெல்லர்ஸ் நகைக்கடை அதிபரான தாஜுதீன், தற்போதைய பெரியகுளம் தொகுதி எம்.பி.யான ஆருண் தலைமையிலான அடியாட்படையை ராஜகம்பீரத்துக்கு அனுப்பி, ஊ.ம. தலைவர் உதவியுடன் சேக் முகமதுவை சென்னைக்குக் கடத்திச் சென்றார். இவர் பெயரில் வங்கியில் போடப்பட்டிருந்த சேமிப்புத் தொகை ரூ. 2 லட்சமும், வீட்டிலிருந்த சுமார் 15 சவரன் நகைகளும் இக்கும்பலால் பறித்துச் செல்லப்பட்டன. சேக் முகமதுவுக்கு ஊசி போட்டு பைத்தியமாக்கி விட்டனர். இப்போது அவர் மதுரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

முகமது இஸ்மாயிலின் வீடும் இக்கும்பலால் பறித்துக் கொள்ளப்பட்டு, நகைக்கடை அதிபரே அந்த வீட்டுக்கான பவர் ஏஜெண்டாக தன்னை நியமித்துக் கொண்டார். இப்போது அந்த வீட்டை ஜமாத் தலைவர் ஜலாலின் தங்கையிடம் நகைக் கடை அதிபர் விற்று விட்டார். இன்று அந்த வீடு தொலைபேசி இணைப்பகத்துக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த அட்டூழியங்கள் அனைத்துக்கும் உடந்தையாக இருந்தவர்கள்தான் மேற்குறிப்பிட்ட இரு வல்லவர்கள்.

இதே ஊரைச் சேர்ந்த தலைப்பாகட்டி என்கிற சையது முகமதுவின் வழக்கிலுள்ள நிலத்தை, வழக்கு நிலுவையில் இருக்கும்போதே அந்த நிலத்தை வளைத்து "தைக்கால் நகர்" எனப் பெயரிட்டு "பிளாட்" போட்டு விற்று ரூ. 28 லட்சத்தை விழுங்கி விட்டார், ஊ.ம. தலைவரான சேக் முகமது. இது தவிர, ஊரணி புறம்போக்கு நிலத்தையும் வளைத்து, "எம்.ஜே. கல்யாண மண்டபம்" என்ற பெயரில் ஒரு திருமணக் கூடத்தைக் கட்டி, அதற்காக உள்நாட்டிலும் மலேசியாவிலும் முசுலீம்களிடம் நிதிவசூல் செய்தும் ஜமாத் வரி போட்டும் பல லட்சங்களை ஏப்பம் விட்டுள்ளார்.

தனது வாழ்க்கை ஊ.ம. தலைவர் சேக்முகமதுவால் பெரிதும் பாதிக்கப்பட்டதால், மனமுடைந்து போன தலைப்பாகட்டி என்கிற சையது முகமது சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக தீக்குளிக்க முயன்றபோது, கைது செய்யப்பட்டு காப்பாற்றப்பட்டார். பின்னர், ஊ.ம. தலைவர் சேக் முகமதுவின் அட்டூழியங்களை கண்டும் காணாமல் இருந்துவரும் வஃக்பு வாரிய அமைச்சர் அன்வர் ராஜாவுக்கு அவர் தன்னந்தனியாக கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தை நடத்தினார். அவருடன் யாரும் பேசக்கூடாது, வழக்கில் சாட்சி சொல்லக்கூடாது என்று ஜமாத் மூலம் கட்டுப்பாடு விதித்த சேக்முகமது - ஜலால் கும்பல், கட்டுப்பாட்டை மீறியதற்காகவும் தம்மைப் பற்றி முணுமுணுத்ததற்காகவும் ஏறத்தாழ 50 குடும்பங்களை ஜமாத்திலிருந்து ஒதுக்கி வைத்துள்ளது. இக்குடும்பங்கள், இறந்தவர்களை முசுலீம் இடுகாட்டில் புதைக்க முடியாமல், ரமலான் காலத்தில் நோன்பு கஞ்சி கூட கிடைக்காமல் பரிதவிக்கின்றனர்.

சேக் முகமது - ஜலால் கும்பலின் அட்டூழியங்களால் வெறுப்புற்றிருந்த மக்கள் ஆதரவோடு 2001-இல் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் அன்வர் ராஜா என்ற பட்டதாரி இளைஞர் போட்டியிட்டார். அவரையும் அவரது குடும்பத்தாரையும் ஜமாத் கூட்டத்தில் வைத்து மிரட்டி சேக் முகமது கும்பல் வேட்பு மனுவை திரும்பப் பெற வைத்தது. தனது உயிருக்குப் பாதுகாப்புக் கோரி அன்வர் ராஜா மானாமதுரை போலீசு நிலையத்தில் மனு கொடுத்ததோடு, சேக் முகமதுவின் ஊழல் முறைகேடுகள், அட்டூழியங்களை ஆதாரங்களுடன் திரட்டி போலீசுத்துறை, நீதித்துறை, அதிகார வர்க்கத்திடம் புகார் மனு கொடுத்து நடவடிக்கை எடுக்க முயற்சித்து வந்தார். ஆத்திரமடைந்த சேக் முகமது தனது அடியாள் படையோடு அன்வர்ராஜா வீட்டைக் காலி செய்து, சாமான்களை அவரது மாமியார் ஊரில் கொண்டு போய் போட்டு அவரை ஊரைவிட்டு வெளியேற்றுவதாகவும் அவருடன் யாரும் பேசக் கூடாது என்றும் எச்சரித்தார்.

இக்கொடுஞ்செயலை எதிர்த்து துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்த அன்வர் ராஜாவை கொன்றொழிக்கத் தீர்மானித்த சேக் முகமது, தனது

ஊராட்சி மன்றத் தலைவர் சேக் முகமது, ஜமாத் தலைவர் ஜலால், பெரியகுளம் தொகுதி எம்.பி. ஆரூண் கும்பலால் ஏப்பம் விடப்பட்ட முகம்மது இசுமாயிலின் வீடு.




படிப்பகம்

www.padippakam.com

ர் அழகர்சா
குண்ட கூண்டர் படை
மியை 21 அன்று நள்ளி
யினர் ஜாவை அடித்து
ரவில் -யில் வீசியெறிந்து
னொர். அந்த வழியாக
விட் போலீசு கண்காணிப்
ரேந்திரன் தலைமையிலான
பளபடையினர் அன்வர்
டு, அழகர்சாமி தலைமை
ராபேர் கொண்ட ரவுடிக் கும்ப
து செய்து, அவர்களது வாக்கு
ணபடி கொலைகார சேக் முகம
பும் கைது செய்தனர். இப்போது
முகமது நிபந்தனை பிணையில்
ளிவந்து விட்டார்.

இப்படி ரவுடித்தனம் செய்யும் சேக் முகமது தி.மு.க. பிரமுகர். அவரை எதிர்த்து நின்று பாதிப்புக்குள்ளான அன்வர்ராஜா அ.தி.மு.க. தொண்டர். ஆனாலும் இவ்விரு கட்சிகளின் மாநில - மாவட்டத் தலைமையினர் இந்த விவகாரத்தைக் கண்டு கொள்ளவேயில்லை.

தாங்கள் எதிர்க்க முடியாமல் பயந்து கொண்டிருந்த சேக் முகமதுவை எதிர்த்து அன்வர் ராஜா துணிவாகப் போராடுவதைக் கண்டு பகுதிவாழ் மக்கள் உற்சாகமும் நம்பிக்கையும் பெற்றுள்ளனர். அன்வர் ராஜாவைப் போலவே, சேக் முகமதுவால் தனது துண்டு நிலத்தை இழந்து, பொய் வழக்குகளால் பாதிக்கப்பட்டுள்ள நாகராசன் என்ற தாழ்த்தப்பட்ட இளைஞரும் இந்த ரவுடித் தலைவருக்கு எதிராகப் போராடி வருகிறார். இவர் மீது ஆத்திரம் இருந்தாலும், தாழ்த்தப்பட்டவர் என்பதால் சாதி பிரச்சினையாகி விடுமோ என்ற அச்சத்தில், நாகராசன் மீது கைவைக்காமல் சேக் முகமது கும்பல்வேறு வழிகளில் காய் நகர்த்துகிறது.

அனைத்து ஓட்டுக் கட்சிகளிலும் செல்வாக்கு செலுத்தி வரும் திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு இலக்கணப் பொருத்தமான உதாரணம் தான் சேக் முகமது தலைமையிலான கும்பல். ஏற்கெனவே அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போயுள்ள இந்த கும்பல், புதிய உத்திகளுடன் தனது ஆதிக்கத்தைத் தொடர எத்தணிக்கிறது. ஆனால், இவ்வட்டாரத்தில் இயங்கிவரும் புரட்சிகர அமைப்புகளின் செயல்பாடுகளால் உத்வேகமடைந்துள்ள இக்கிராமத்து இளைஞர்கள், இக்கிரிமினல் கும்பலுக்கு எதிராக அணிதிரளத் தொடங்கிவிட்டனர்.

**- பு.ஜ. செய்தியாளர், மானாமதுரை.**

**7-ஆம் பக்கத் தொடர்ச்சி**

*கூடாது என்று அரசாங்கம் கூறுகிறது. நாங்கள் ஆயுதங்களை வைத்திருப்பதால்தான் சமூக விரோதிகள் கட்டுப்பாட்டுக்குள் இருந்தனர் என்பதுதான் யதார்த்தம்'' (தோழர் ராமகிருஷ்ணா பேட்டி: இந்து நாளேடு, 17அக். 04)*

போலீசும் அதன் இகரசிய கொலைக் குழுக்களும் புரட்சியாளர்களைக் கொலைசெய்வது தொடரும் போது, அவர்களுக்கு எதிராகத்தான் முக்கியமாகத் தற்காப்புக்காகத்தான் ஆயுதங்களைத் தாம் வைத்திருக்க வேண்டியிருக்கிறது என்று வாதிடுவதற்குப் பதிலாக, சமூக விரோத சக்திகளிடமிருந்து மக்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியுள்ளது என்று மழுப்பலாகப் பேசுகிறார்கள். ஏன்?

சண்டை நிறுத்தமும் பேச்சு வார்த்தைகளும், சலுகைகள் - சீர்திருத்தங்களும் அதேசமயம் ஒரு தாழ்நிலை மோதல்களும் அடங்கியதுதான் ஏகாதிபத்திய யுத்த தந்திரம் என்று கூறும் இ.க.க. (மாவோயிஸ்ட்), மறுபுறம், தனது கட்சியின் வளர்ச்சி - ஆயுதப் போராட்ட பலத்தைக் கண்டு ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவு அஞ்சி, பேச்சு வார்த்தைக்காக வாதாடி வருவதன் விளைவுதான் இதுவென்று பேசி வருகிறது. குறிப்பாக,கடந்த தேர்தலில் நக்சல்பாரிகளை ஒடுக்குவதற்காகத் தனக்கு வாக்களிக்கும்படி சந்திரபாபு நாயுடு கோரினார், மக்கள் அவரை ஆட்சியிலிருந்து விரட்டி விட்டனர்; காங்கிரசு உட்பட எதிர்க்கட்சிகள், தாம் ஆட்சிக்கு வந்தால் நக்சல்பாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி அமைதி வழித்தீர்வு காண்போம் என்று வாக்கு கொடுத்தனர். அமைதியையும் வளர்ச்சியையும் விரும்பிய மக்கள் எதிர்த்தரப்பை வெற்றிபெறச் செய்தனர். இதன் விளைவாகதான் சண்டை நிறுத்தம், பேச்சு வார்த்தைகள் என்று இதன் பின்னணி காரணத்தை இ.க.க. (மாவோயிஸ்ட்) விளக்குகிறது. மேலும், நக்சலைட்டுகள் பிரச்சினை ஒரு சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை என்று ஆளும் வர்க்கங்கள் இதுவரை கூறிவந்தது; இப்போது, அது ஒரு சமூகப் பொருளாதாரப் பிரச்சினை என்று ஒப்புக் கொண்டிருப்பதே சாதகமானதுதான் என்று வாதிடுகிறது.

ஆனால், உண்மை என்னவென்றால், சண்டை நிறுத்தமும், அமைதிப் பேச்சு வார்த்தைகளும் இ.க.க. (மாவோயிஸ்ட்)க்கும் முக்கியமாக அவசியமாக இருந்தது. இதை அதன் தலைமையே பின்வரும் வகையில் ஒப்புக் கொள்கிறது.

''உண்மை என்னவென்றால் சண்டை நிறுத்தம் அறிவிப்பிற்கு முன்பு, ஒரு மாதத்திற்கு மேலாக சாக்குப்போக்குக் காட்டித் தட்டிக் கழித்தது அரசாங்கம். பல்வேறு ஜனநாயக அமைப்புகளின் நெருக்கும் நிர்பந்தம், இ.க.க. (மா-லெ) ம.யு. மற்றும் பிற நக்சலைட்டு அமைப்புகளின் வலியுறுத்தல் காரணமாகத்தான் இறுதியில் அரசாங்கம் கீழிறங்கி வந்து மூன்று மாதங்களுக்கு ஆயுதந்தாங்கிய பகைமை நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வது என்று ஜூன் 16-ஆம் தேதி அறிவித்தது.''

சண்டை நிறுத்தமும், பேச்சுவார்த்தையும் ஆந்திர அரசாங்கத்தை விட இ.க.க. (மாவோயிஸ்ட்)களுக்குத் தான் மிகவும் அவசியமாயிருந்தது என்று இதிலிருந்து தெரிகிறது. மனித உரிமை மற்றும் ஜனநாயக அறிவுஜீவிகள் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டபோது இவர்களும் விருப்பமுடன் ஈடுபட்டனர். அதற்கான காரணங்கள் என்ன?

(தொடரும்)

**ஒருபுறம் பேச்சுவார்த்தை நாடகமாடிக் கொண்டே, இன்னொருபுறம் நக்சல்பாரி புரட்சியாளர்களை ஒழிப்பதற்கான திட்டம் போடும் நோக்கத்தோடு நடத்தப்பட்ட முதலமைச்சர்கள் மாநாடு.**



www.padippakam.com

# இராமதாசு - திருமாவளவன் வழங்

# “தமிழ்ப் பாதுகாப்பு இயக்க

## புத்தம் புது கா

அ-அம்மா! ஆ-ஆமாம்! - இந்த இரண்டெழுத்து வார்த்தைகளுக்கு மேல் ஏன் தமிழ்? எதற்கு தமிழ்? என்று தனது 'கான்வென்ட்' கொழுப்பைத் தமிழர்களிடம் காட்டுகிறார், பார்ப்பன பாசிச ஜெயலலிதா.

பா.ம.க. தலைவர் இராமதாசும், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவனும் சேர்ந்து, 'தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம்' என்ற தங்கள் கூட்டமைப்பின் சார்பில், ''தமிழ்த் திரைப்படங்களின் பெயர்கள் ஆங்கிலத்தில் இருக்கக் கூடாது. அப்படி ஆங்கிலப் பெயர் வைத்தால் போராட்டம் நடத்துவோம்'' என்று 'தமிழ் மீட்புத் தொடர் போராட்டங்களுக்கு' பிறகு எச்சரிக்கை அறிக்கை வெளியிட்டனர்.

உடனே, தொண்டையை கனைத்துக் கொண்டு சிலிர்த்த ஜெயலலிதா, ''தமிழ்த் திரைப் படத் தயாரிப்பாளர்கள் தாங்கள் விரும்பிய பெயர்களை தங்கள் படத்துக்கு வைத்துக் கொள்ளலாம். இந்தப் பெயரைத்தான் வைக்க வேண்டும் என்பதற்கோ இந்தப் பெயரை வைக்கக் கூடாது என்று சொல்வதற்கோ யாருக்கும் உரிமை இல்லை. மேலும், ஆங்கிலத்தில் பெயர் வைக்கக் கூடாது என்பதற்கு எந்தவிதமான சட்டமும் கிடையாது... அப்படி நிர்பந்தம் செய்ய (தமிழ் பெயர் வைக்க) போராட்டம் நடத்தினால் அதனைத் தமிழக அரசு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது'' என்றார்.

குறிப்பாக, எஸ்.ஜே. சூர்யாவின் 'பி.எப்.' (பெஸ்ட் பிரண்ட்) மற்றும் கமல்ஹாசனின் 'மும்பை எக்ஸ்பிரஸ்' என்ற இரு படங்களின் பெயர்களை (பெயர்களை மட்டும் தான்) தமிழில் மாற்றும்படி ''வேண்டுகோள்'' வைத்ததற்குதான் இப்படித் தாண்டவமாடினார், ஜெயலலிதா.

உடனே தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் சங்கம், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் மற்றும் தி.மு.க.வின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் நடிகர்களுமான சரத்குமார், நெப்போலியன் ஆகியோர் ஜெயலலிதாவிற்கு ''பாராட்டு'' தெரிவித்து காக்கைகள் போல் கரைந்தனர். ''முதலமைச்சர் தலையிட்டு சரியான(!) முடிவு எடுத்தார்'', ''இனி திரையுலகுக்கு எந்தப் பிரச்சினை வந்தாலும் அம்மா பார்த்துக் கொள்வார்'' என்று குதித்தனர்.

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் மும்மூர்த்திகள் (இடமிருந்து) சேதுராமன், இராமதாசு மற்றும் தொல். திருமாவளவன்.



பா.ஜ.க முதல் காங்கிரசு அனைத்து ''தேசிய''க் கட்சிக சினிமாவை விட்டு விடுங்கள், அ யல் வேறு, கலைவேறு என்று கூறி ரு டுக் கொடுக்கிறார்கள். சினிமா என் சமூகத் தொண்டாகவா உள்ளது? தமிழ மக்களைக் கொள்ளையடிப்பதுதானே நடக்கிறது!

பிற மொழிப் படங்கள், அவை வெளியாகி ஏழு வாரங்களுக்குள் கர்நாடகாவில் திரையிடக் கூடாது என்று கூறி அங்கே தடை விதித்திருக்கிறார்கள்; மீறினால் அரங்குகளைத் தாக்குகிறார்கள். தமிழில் பெயர் வை என்று கோரினால், இங்கே கலைக்கு உரிமை, ஜனநாயகம் என்று குதிக்கும் ''தேசியவாதி''களும், தமிழ் சினிமாக் காரன்களும் அதுபற்றி வாயைப் பொத்திக் கொண்டு விழிபிதுங்கி நிற்கிறார்களே, ஏன்? தமிழன் என்றால் இளிச்சவாயன், தமிழ் மொழி ''நீஷ பாசை'' என்ற திமிர்த்தனம் தானே!

நன்றாக, இந்தக் கோரிக்கையை இன்னொரு தடவை படியுங்கள்! ''தமிழ் படத்திற்கு தமிழ் பெயர் வையுங்கள்!'' தமிழனை, தமிழ் பண்பாட்டை, மொழியைச் சீரழிக்கும் தரங்கெட்ட ஆபாச - அருவெறுப்புத் தமிழ்ப் படங்களைத் திரையிட விடமாட்டோம் என்று எச்சரிப்பதற்கு பதில், இவை பற்றியெல்லாம் எங்களுக்கு அக்கறை இல்லை; தரங்கெட்ட படம் பற்றி கவலையில்லை, ஆனால் தமிழில் பெயர் வையுங்கள் என்று கெஞ்சும் இந்த தமிழ் குடிதாங்கிகளை, இடிதாங்கிகள் போல் தமிழகம் தாங்கிக் கொண்டிருப்பது தான் இவ்வளவுக்கும் காரணம்.

ஓட்டுச்சீட்டு அரசியல்தான் மூலதனமே போடாமல் கொள்ளை இலாபம் தரும்



படிப்பகம்

www.padippakam.com

தொழில். அதைப்போலத்தான் சினிமா எதிர்ப்பு அரசியலும் செலவே இல்லாமல் பெரும் விளம்பரம் தேடித்தரும் உத்தி எனத் தெரிந்துதான் இராமதாசு - திருமாவளவன் கூட்டணி, இந்த எதிர்ப்பில் இறங்கியிருக்கின்றனர்.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற பெயரில் நமது கல்வி, பண்பாடு, மொழி, வாழ்வு, பொருளாதாரம் என எல்லாவற்றையும் சீரழிக்கும் மறுகாலனியாக்கக் கொள்கைக்கு எதிராக இங்கு எந்தஒரு ஓட்டுக் கட்சிக்காரனும் சுண்டுவிரலைக் கூட அசைக்கவில்லை. அந்த ஆழிப் பேரலையின் அழிவு வேலையைத் தடுப்பதற்கு வக்கற்றவர்கள் தாம், கூரையில் ஏறி நின்று கூவுகிறார்கள்.

''தொடங்கியது... மூன்றாவது மொழிப் போர்!'' உடுக்கை அடித்துக் கொண்டு மார்கழி மாத பஜனை கோஷ்டி போல இவர்கள் கிளம்பியிருக்கிறார்கள். இவர்களுக்கு ஏதாவது கொடுத்தால் வாங்கிக் கொண்டு, தேர்தல் முடிவதற்கு முன் ஊரைச் சுற்றி விட்டு, போய் சட்டமன்றத்தில் அடங்கிவிடுவார்கள் என்று சினிமா கழிசடைகளுக்கு நன்றாகவே தெரியும்! எனவே தான், மாமூலுக்கு கைநீட்டும் போலீசைப் பார்த்து நக்கலடிக்கும் சாராய ரௌடிகள் போல், சினிமா கும்பல் இவர்களைப் பார்த்து நக்கலடிக்கிறது.

சினிமா தலைப்பில் மட்டும்தானா, ''தமிழுக்குப் பாதுகாப்பு'' இல்லாமல் இருக்கிறது?

மக்கள் தொடர்பு ஊடகங்களின்

## அட்டைக் கத்தி சண்டை

**''ஸை**க்கிள் பாகங்களின் பெயர்கள் எல்லாம் தமிழா?'' 'ஹாண்டில் பார், செயின், ரிம், டயர், டியூப்' என்பதெல்லாம் தமிழா? அது தமிழா? இது தமிழா? என்று எகிறுகிறார் ஜெயா. தமிழ் மொழியைத் துச்சமாக மதிக்கும் அவரின் திமிரைப் புதிதாக விளக்க வேண்டியதில்லை. ஆனால், இராமதாசின் தமிழ்ப் பற்றோ மலிவான நகைச்சுவை நாடகம் போல நடக்கிறது.

இப்போது தைலாபுரத்தில் (ராமதாசின் பண்ணை வீட்டில்) சுத்தத் தமிழ் வாசனைதான் வீசுகிறது. ''எனது வீட்டில் ராஜா என்று ஒரு பையன் இருக்கிறான். அவனை இப்போது 'ராசா' என்றுதான் அழைக்கிறேன். அதுபோல் சோப்பு எடுத்து வா என்று சொல்ல மாட்டேன், 'வழலைக்கட்டி' எடுத்துவா என்றுதான் சொல்வேன்'' என்று கூறி தன்னுடைய கூட்டத்தையே பெரும் சிரிப்பலையில் ஆழ்த்தி ரசிக்கிறார், இராமதாசு. தன்னுடைய மகள் கவிதாவை ஆங்கில வழிக் கல்வியில் படிக்க வைத்து, பட்டம் சூட்டிவிட்டு மேடையில் தமிழுக்கு நடிக்கிறார். மேடையில் மகள் ஆங்கில வார்த்தைகளைக் கலந்து பேசும் போது குறுக்கிட்டு ஒவ்வொரு வார்த்தைக்கும் 100 ரூபாய் அபராதம் விதித்து, அரங்கில் பலத்த கரவொலி சிரிப்பொலியை ஏற்படுத்துகிறார்.

'செம்மொழிச் செம்மல்' தொல். திருமாவளவனின் தூய தமிழ் நாட்டமும், ராமதாசுக்கு சளைத்ததல்ல!

திடீரென ஒருநாள், சென்னை - உதயம் திரையரங்கில் 50 பேருடன் வரிசையில் நின்றார், திருமாவளவன். ''தமிழ் பெயர் சூட்டும் படங்களை ஆதரிப்பதற்காகவும், தமிழ் படத் தயாரிப்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் தமிழ் பெயர் சூட்டும் படங்களைப் பார்க்க தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தினர் முடிவு செய்துள்ளோம்'' என்றார். முதல் கட்டமாக, ''உள்ளக் கடத்தல்'' என்ற தூய தமிழ் தலைப்புள்ள படத்தை பார்த்தார். ஆக, 'ஒரிஜினல்' தமிழ் சினிமாவை விஞ்சும் அளவுக்கு இப்போது ''தமிழ் பாதுகாப்பு இயக்கம்'' தமிழ் ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது.

சென்ற ஆண்டு, ஆகஸ்டு மாதம் தம் கட்சியின் ''தாய்மண்'' ஏட்டில் இராமதாசைப் பற்றி திருமாவளவன் சொன்னது இது: ''இராமதாசு தமிழகத்தின் நலனுக்காக நடிகர்களை எதிர்ப்பதாகத் தெரியவில்லை. தனது மகன் (அன்புமணி) கொல்லைப்புறமாக பதவியைப் பிடித்ததாக நடிகர் விஜயகாந்த் சுட்டிக் காட்டியதால் தான் அவர் கொதித்தெழுந்தார். ரஜினிகாந்த், விஜயகாந்த் இருவரையும் எதிர்த்த இராமதாசு உடனேயே சமரமாகிவிட்டதாக அறிக்கை விடுகிறார். அப்படியென்றால், அவர்கள் இருவரும் ராமதாசின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டார்களா என்ன? இதன் பின்னணியை தமிழ் மக்கள் உணர வேண்டும். ஆக இராமதாசின் எதிர்ப்பு சுயநலமானது!'' என்று நீண்ட பிரசங்கம் நடத்தியவர், இப்போது இராமதாசின் பின்னால் பூனையைப் போல பதுங்கிக் கொள்வதை சுகமாக உணர்கிறார். ஆனால், வசனம் மட்டும் வீரபாண்டிய கட்டபொம்மன், விருமாண்டி, திருப்பாச்சி அளவுக்கு பட்டையை கிளப்புகிறார்.

ஆனால், இந்த எரிமலைகள் பக்கத்திலேயே 'கேமிரா'வை வைத்து, 'பி.எப்.' படப்பிடிப்பு நடத்தியதை கதாநாயகன் எஸ்.ஜே. சூர்யா தினத்தந்தி நிருபரிடம் எந்த பதற்றமும் இல்லாமல் கூறியிருப்பதை கேளுங்கள்.

''நேற்று நான் படப்பிடிப்பை நடத்திக் கொண்டிருந்த போது (15.2.05) விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தை சேர்ந்த சிலர் கும்பலாக வந்து, படத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்று கூறினார்கள். இதுபற்றி(!?) தங்கள் தலைவர் திருமாவளவனுடன் பேசும்படி கூறினார்கள். நான் அவருக்கு போன் செய்தேன். லைன் கிடைக்கவில்லை. (லைன் கிடைத்தால், கிளைமாக்ஸ் தெரிந்துவிடுமே!) அதைத் தொடர்ந்து அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மாலையில் வருவதாகக் கூறிச் சென்று விட்டார்கள்'' என்றார்.

என்ன அதிசயம் இது! எரிமலைகள் 'ஐஸ்கிரீம்'களாக உருகிச் சென்றுள்ளதே! 'பி.எப்.' கதை உண்மையிலேயே அவர்களை 'பெஸ்ட் பிரண்ட்'டுகளாக்கி விட்டதா?

''உள்ளக் கடத்தல்'' எனத் தமிழில் பெயர் வைக்கப்பட்ட திரைப்படத்தைப் பார்க்க வந்த தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தினர்.



www.padippakam.com

மற்ற பிரிவுகளில் தமிழ்ப் பாது காப்புக்கு உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளதா? இவர்கள் யாரை ஏமாற்றுகிறார்கள்?

சன் டி.வி.' ஏற்கனவே வைத்த பெயர்; அதை இப்போது மாற்றத் தேவையில்லை'' என்கிறார்கள்! இப்போது சன் டி.வி.யில் தினமும் பச்சை தமிழ் நிகழ்ச்சிகள்தான் ஒளிபரப்பு ஆகிறதா? பாதிநேரம், நடிகைகளைப் போல தமிழ் மொழியும் அரைநிர்வாணமாக, நீச்சல் உடையில்தானே வருகிறது! ஜுனுன் தமிழ், ஜுராசிக் தமிழ் என்று எத்தனை தமிழை அறிமுகப்படுத்தியிருக்கிறது சன் டி.வி.! ஏன் அதை எதிர்க்க இவர்கள் துணியவில்லை?

இவர்கள் தமிழைப் பாதுகாப்பது உண்மையென்றால், தமிழ் ஊடகங்களின் தலையாய பத்திரிகைகள் என்று வலம் வரும் 'குமுதத்தி'லிருந்து 'குங்குமம்' வரை 'ஆனந்த விகடனி'லிருந்து 'ஜூனியர் விகடன்' வரை மற்றும் இக்கும்பல்களின் 'ஜோதிடம்', 'ஆலயம்', 'சக்தி' போன்ற மூடப்பத்திரிகைகளிலும் கன்னித் தமிழிலா கட்டுரைகள் வருகிறது? 'ஜாலி', 'ஜில்', 'மியாவ்', 'ரூட்', 'உஷ்', 'இச்', 'ஜம்', 'பிட்ஸ்' என்ற தலைப்பில் இருட்டறை சங்கதிகளை மட்டுமே எழுதும் இந்த எழுத்து விபச்சாரிகளுக்கு எதிராக, ஏன் இவர்கள் தமிழ் பாதுகாப்பு இயக்கத்தை திருப்பவில்லை?

அவ்வளவு ஏன்? தமிழ் பண்பலை அலைவரிசை என்ற பெயரில் 'ரேடியோ மிர்சி'-லும் 'சூரியன் எப்.எம்.' மிலும் தமிழ் மொழி படும் பாட்டை, தற்குறி தமிழர்களால் கூட சகித்துக் கொள்ள முடியவில்லையே! அதற்கெதிராக எந்த ஒரு ஆர்ப்பாட்ட அறிக்கையும் இவர்கள் அறிவிக்கவில்லையே, ஏன்?

ஏனெனில் இந்த 'மக்கள் தொடர்பு' ஊடகங்கள் மூலம்தான் இவர்கள் மாபெரும் அரசியல் தலைவர்களாக மக்களிடம் விற்கப்படுகிறார்கள். அவற்றின் அட்டைப்படங்களில் சினிமா நடிகைகளுக்கு இணையாக, 'மேக்கப்'புடன் இவர்களும் சிரிக்கிறார்கள்; அதற்காக அப்பத்திரிகை முதலாளிகளுடன் குலாவுகிறார்கள். பிறகு எப்படி அதை எதிர்ப்பார்கள்?

ஆக, சினிமாவை எதிர்ப்பதோ, தமிழைத் தரங்கெட்ட மொழியாக மாற்றும் ஊடகங்களை எதிர்ப்பதோ இவர்களுடைய நோக்கமல்ல. அவற்றை அவ்வப்போது மிரட்டி அவற்றின் மீது யார் தொடர்ச்சியாக சவாரி செய்வது என்பதுதான் இவர்களுடைய உண்மையான ஏக்கம்.

அ.தி.மு.க., தி.மு.க. என்று ஆளும் கட்சிகளையே சுற்றித் திரியும் சினிமா மற்றும் செய்தி ஊடகங்களை வரம்புடன் மிரட்டி தங்களுக்கும் அதில் விளம்பரம் தேடிக் கொள்ளும் ஒரு மலிவான முயற்சிதான் 'தமிழ்ப் பாதுகாப்பு' எச்சரிக்கை!

இராமதாசின் திடீர் தம்பி, தொல். திருமா சொன்னது போல் ''அரசியல் அடிப்படையிலான பிரச்சினைகளை எதிர்க்காமல் அவற்றை எல்லாம் திசைத்திருப்பவே இராமதாசின் எதிர் நடவடிக்கைகள் பயன்பட்டுள்ளன.'' (தாய்மண், சூலை 2004)

சகல அதிகாரத்தையும் கட்சியையும் ஆட்சியையும் தம் ரத்த சொந்தங்களுக்குள்ளேயே சுவைத்துக் கொண்டு, அதை தக்கவைத்துக் கொள்வதற்கும் விரிவுபடுத்துவதற்குமான கருவியாக சாதி, இன, மொழிப் போராட்டங்களை கக்கத்தில் வைத்துக் கொள்வதுதான் இராமதாசின் சாணக்கியம்!

தன்னுடைய மகன் அன்புமணியை அமைச்சராக்கியதைப் பற்றி நடிகர் விஜயகாந்த் கேள்விகேட்டதிலிருந்துதான் சினிமா தமிழைக் காப்பாற்ற அவர் சிலம்பம் சுழற்றினார். தேர்தல் வரை இதையே சூடுபறக்க சுழற்றுவது என்று தம்பி திருமாவளவனையும் சேர்த்துக் கொண்டார். தனியாக சிலம்பம் சுற்றினால் கூட்டம் சேராது என்று அவருக்குத் தெரியும்!

உண்மையில் தமிழையும் தமிழனையும் தமிழ் மண்ணையும் தமிழ் பண்பாட்டையும் பாதுகாக்கும் நோக்கம் இவர்களுக்கு இருந்தால் தமிழ்நாடு சீரழிந்ததற்கான காரணத்தை கண்டறிந்து மொத்தமாக தமிழ் மண்ணை மீட்பதுதானே உண்மையான தமிழ்ப்பற்று!

தனியார்மயம், தாராளமயம், உலகமயத்தால் தமிழன் வாழ்விழந்து, கல்வியிழந்து, சொந்த மண்ணிழந்து, பண்பாடிழந்து சாரை சாரையாக நகரங்களுக்கு ஓடி சாலையோரங்களில் வாழ்கிறானே, அவனைக் காப்பாற்ற இதுநாள் வரையில் இவர்கள் எந்த போராட்டத்தை நடத்தினார்கள்? இந்தத் தமிழர்கள் மானமுடன் வாழ்ந்தால்தானே அவன் மொழிக்கும் மதிப்பு இருக்கும்! இந்த சாதாரண அரசியல் அறிவு கூட இல்லாத அரசியல் மூளிகளா இவர்கள்! இல்லை, பிழைப்புவாத அரசியல் வாதிகளில் இவர்கள் இலக்கண சுத்த மானவர்கள். எனவே, தங்களுடைய அரசியல் பாதுகாப்பை 'தமிழ் பாதுகாப்'பில் தேடிக் கொண்டார்கள்.

● பச்சையப்பன்

**தலையங்கம் தொடர்ச்சி**

கூரியர், உலர் சலவை, வாடகைகள், கேபிள் தொடர்பு, புகைப்படம் அச்சிடுதல், டுடோரியல், வங்கி முதல் திருமண மண்டபம் வரை அனைத்தும் சேவைத் தொழில்களாக அறிவிக்கப்பட்டு வரி வசூலிக்கப்படுகிறது. இனி, மருத்துவமனை, மருத்துவ சோதனை, தங்கும் விடுதிகள் என்று மேலும் மேலும் விரிவுபடுத்தப்படும். அதேசமயம் வரி ஏய்ப்பு செய்யும் முதலாளிகள், கருப்புப்பண ஆசாமிகள் போன்றவர்களுக்கு தானே முன் வந்து வருமானத்தை அறிவிக்கும் திட்டம், அதீத உற்பத்தி செய்த கம்பெனிகளுக்கு வரிவிலக்கு சலுகை என்று பல வகையிலும் முதலாளிகளுக்குச் சாதகமாகவே வரி விதிப்புகள் உள்ளன.

எந்தவகை வரி விதிப்பானால் என்ன, கருவூலத்துக்குத்தானே, அதாவது அரசுக்குத்தானே போய்ச் சேருகிறது; மக்கள் நலப் பணிகளுக்குத்தானே பயன்படும் என்று பலரும் அப்பாவித்தனமாக எண்ணுகிறார்கள். புதிய பொருளாதாரக் கொள்கையின்படி, ஏழை - எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளான விவசாயம், உணவு, மருத்துவம், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீடு படிப்படியாக நிறுத்தப்பட வேண்டும்; மக்கள் நலப் பணிகளில் இருந்து அரசு விலகிக் கொள்ள வேண்டும்; அதேசமயம், இந்த அரசு இயந்திரத்தை, குறிப்பாக அதன் இராணுவம், போலீசு போன்ற ஒடுக்குமுறை அமைப்புகளை நவீனப்படுத்துவதற்கு, விரிவாக்குவதற்கு மட்டுமே அரசின் கவனமும் வருவாயும் குவிக்கப்பட வேண்டும்.

ஏகாதிபத்திய எஜமானர்களின் இந்தக் கட்டளைகளை ஏற்று, உழைக்கும் மக்களைப் பிணக் கிடங்குகளில் குவிப்பதற்கான பணிகளைத்தான் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. ஆகவே, தற்போது இந்த மக்கள் விரோத, நாட்டு விரோத வரி விதிப்பை எதிர்த்துப் போராடும் தமிழக வணிகர்களோடு அனைத்து உழைக்கும் மக்களும் கைகோர்க்க வேண்டும்.

**அட்டைப் படக் கேலிச் சித்திரம்: மறைந்த ஓவியர் உதயன்.**


படிப்பகம்

www.padippakam.com

### "பாஸ்" உண்டு; "பஸ்" இல்லை!

# பள்ளி நேரத்தில் கூடுதல் பேருந்துகளை இயக்கக் கோரி ஆர்ப்பாட்டம்!

திருச்சி நகரில் பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு பெயரளவில் வழங்கப்பட்டுள்ளதே தவிர, அதைப் பயன்படுத்தும் வகையில் பள்ளி நேரத்தில் கூடுதல் அரசுப் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. பள்ளி நேரங்களில் வரும் பேருந்துகளெல்லாம் அளவுக்கு மீறிய பயணிகளோடு திணறிக் கொண்டு வருவதும், மாணவர்களை ஏற்றாமல் செல்வதும் தொடர்கிறது. இதனால் மாணவர்கள் ஜன்னல் கம்பியையும் ஒருவர் சட்டையை ஒருவர் பிடித்துக் கொண்டு படிகளில் தொங்கியபடியும் உயிரைப் பணயம் வைத்து பயணம் செய்கின்றனர். கிராமப்புற பேருந்துகளில் மாணவர்கள் மேற்கூரையில்தான் பயணம் செய்ய முடிகிறது. நெரிசலில் முட்டி மோதி உள்ளே ஏறும் மாணவர்களை சில ஓட்டுநர்களும் நடத்துனர்களும் கொச்சையான வார்த்தைகளால் வசைபாடுவதும் தொடர்கிறது. சில மாணவர்கள் காசு கொடுத்து தனியார் பேருந்துகளில் செல்வதும், காசில்லாத ஏழை மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல முடியாத அவலமும் தொடர்கிறது. கடந்த ஜனவரி 27-ஆம் தேதியன்று 8-ஆம் வகுப்பு பயிலும் மாணவன் கார்த்திக், கூட்ட நெரிசலில் பேருந்தில் ஏற முடியாமல் கீழே விழுந்து பேருந்து சக்கரத்தில் கால் நசுங்கி விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறான்.

பார்ப்பன பாசிச ஜெயா அரசு, பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே உலக வங்கி உத்திரவுப்படி இலவச பஸ் பாஸ் சலுகையை ரத்து செய்தது. இதற்கெதிராக மாணவர்களும் உழைக்கும் மக்களும் போராடியதன் விளைவாக, மீண்டும் அச்சலுகையை வழங்குவதாக அறிவித்தது. ஆனால், தேவைக்கேற்ப பள்ளி நேரங்களில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படாததால், பாஸ் இருந்தும் மாணவர்களால் அதைப் பயன்படுத்த முடிவதில்லை.

அன்று "சூத்திரன் படிக்கக் கூடாது" என்ற பார்ப்பன மனுதர்மம் சட்டமாக இருந்தது. இன்றோ, "காசில்லையேல் கல்வியில்லை" என்ற பன்னாட்டுக் கம்பெனிகளின் சட்டம் பறைசாற்றுகிறது. ஏழைகளுக்குக் கல்வி மறுக்கப்பட்டு அரசுப் பள்ளிகள் மூடப்படுகின்றன. அரசு சலுகைகளுடன் தனியார் கல்வி நிறுவனங்கள் புற்றீசலாய்ப் பெருகுகின்றன. ஏழை மாணவர்களின் இலவசப் பேருந்துப் பயணம் கூட கேள்விக் குறியாகி வருகிறது. எனவே, மாணவர்களின் இலவச பஸ் பாஸ் உள்ளிட்ட கல்வி உரிமைக்காகவும், நாடே பன்னாட்டுக் கம்பெனிகளின் வேட்டைக் காடாக மாற்றப்படுவதற்கு எதிராகப் போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் பள்ளி நேரத்தில் கூடுதல் பேருந்துகளை இயக்கக் கோரியும், வட்டப் பேருந்தில் (C1, C2) மாணவர் பஸ் பாஸ் செல்லும் என அறிவிக்கக் கோரியும், பிப்ரவரி 2-ஆம் தேதியன்று புத்தூர் நால்ரோட்டு அருகே பு.மா.இ.மு. வீச்சான பிரச்சாரத்துடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பள்ளி - கல்லூரி மாணவர்களும் பெற்றோரும் திரளாகப் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம், திருச்சி நகர மாணவர்கள் - பெற்றோரின் குரலை எதிரொலிப்பதாய் அமைந்தது. பெரும்பாலான நாளேடுகள் இந்த ஆர்ப்பாட்டச் செய்தியை வெளியிட்டன.

அதைத் தொடர்ந்து, அரசு போக்குவரத்துக் கழக (திருச்சி) பொது மேலாளர், வட்டப் பேருந்துகளில் (C1, C2) மாணவர்களை ஏற்றிச் செல்ல அனுமதித்துள்ளதாகவும், இதர கோரிக்கைகளைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகவும் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டுள்ளார். பள்ளி நேரத்தில் கூடுதல் பேருந்துகளை இயக்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்டமும், அதில் கிடைத்த முதற்கட்ட வெற்றியும் திருச்சி நகர மாணவர்கள் - பெற்றோர்களிடம் பு.மா.இ.மு. மீது புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

- புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, திருச்சி.





"புதிய ஜனநாயகம்" உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

1. வெளியிடும் இடம் : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : இரா. சன்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் : இரா. சன்முகராசு,
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
5. ஆசிரியர் பெயர் : இரா. சன்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

இரா. சன்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2005

(ஒப்பம்) இரா. சன்முகராசு, வெளியிடுபவர்.


Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05

## அன்று கொன்றது சுனாமி! நின்று கொல்கிறது அரசு!

# இதோ ஒரு சாட்சியம்!










ஏழை - எளிய மக்கள் என்ன, வேண்டாத கழிவுப் பொருட்களா? நகருக்கு வெளியே கொண்டு போய்க் குவிக்கிறது, அரசு!

சிங்காரச் சென்னையில் ஏழை - எளிய மக்களுக்கு வாழும் உரிமை இல்லையா? இரண்டாண்டுகளில் 20,000 குடும்பங்களை வேரோடு பிடுங்கிக் கொண்டு போய் 20 மைல்களுக்கு அப்பால் (துரைப்பாக்கத்தில்) குப்பையாகக் கொட்டியது, அரசு.

சுனாமி பீதியூட்டி சூழ்ச்சி செய்த அரசு, ஆயிரக்கணக்கான கடற்கரைக் குடிசைகளைத் திடீரென்று இயந்திரங்களைக் கொண்டு இடித்துத் தள்ளியது. ஒரே நாளில் 2000 குடும்பங்களை அங்கு குடியமர்த்தியது.

இதுவொன்றும் நிவாரணப் பணியல்ல; மக்கள் நலச் சேவையல்ல. கொள்ளை இலாபத்தைக் குறிவைத்து அரசே நடத்தும் மோசடி. நகரக் குடிசைகளை இடித்து வீட்டுமனைகளைக் கைப்பற்றுவதால் அரசுக்கு இலாபம் பலகோடி ரூபாய்!

ஏழைகள் வாழும் குப்பைமேடுதானே என்று கருதி அரசும் அதிகாரிகளும் அங்கு குடி தண்ணீர், மின்சாரம், பள்ளி, மருத்துவமனை, போக்குவரத்து, தொழில் என்று மக்கள் வாழ்வதற்கான எந்த அடிப்படைத் தேவையையும் எண்ணிப் பார்க்கவில்லை.

பிப்.22, செவ்வாய்க்கிழமை, இளங்காலை. பிழைப்புத் தேடிப் புறப்பட்ட உழைப்பாளிகள், படிப்பு நாடிக் கிளம்பிய பிள்ளைகள் என்று பழைய மாமல்லபுரம் சாலையில் குவிந்தனர். போக்குவரத்துக்கு வழியின்றி அலைமோதிய மக்களை எதிர்கொண்டது போலீசுதான்.

சமாதானம் பேசிக் கொண்டே அதிரடி கமாண்டோ போலீசைக் குவித்து கொலைவெறித் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டு சிறுவர்கள், பெண்கள் மண்டையைப் பிளந்து, இளைஞர்களைத் தாக்கி, பொய் வழக்குப் போட்டு சிறையிலடைத்தனர்.

நாசவேலையில் சுனாமியை விஞ்சியது, பாசிச ஜெயலலிதா அரசு. பார்வையாளர்களாகிப் போயின ஓட்டுக்கட்சிகள்.

படிப்பகம்